பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 200

ஞாயிற்றுக்கிழமை
15 ஜூன் 2025

ஆனி 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## ஈரான் – இஸ்ரேல் பதற்றம் உச்சம்!

தெஹ்ரோன், ஜூன் 15
இஸ்ரேலும் ஈரானும் நேற்றுப் பரஸ்பரம் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. இதனால், பிராந்தியப் போரொன்று தோற்றம் பெறுவதற்குக் கூடுதலான சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளன 14

யாழ்ப்பாணம்

# பொருளாதார மத்தியநிலையம் ஓகஸ்ட் மாதம் முதல் இயங்கும்!



அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணம் பொருளாதார மத்தியநிலையம், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் மீண்டும் இயங்க ஆரம்பிக்கும் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். 14

## சாக்கடை அரசியலில் சில தமிழ்த்தரப்புகள்

அமைச்சர் சந்திரசேகர் விமர்சனம்

யாழ்ப்பாணம், ஜூன் 15
தமிழ்த் தேசியப் பரப்பில் இருந்து ஓரங்கட்டப்பட்டு, துரோகிகள் என முத்திரை குத்தப்பட்ட - ராஜபக்சக்களின் காலை நக்கி பிழைக்கின்றவர் என விமர்சிக்கப்பட்ட - ஊடகவியலாளர்களைக் கொன்றவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுடன் கூட்டணி அமைக்கும் நிலையிலேயே தமிழ்த் தேசியக் கட்சி 14



## 240 கிலோ கஞ்சா பொன்னாலையில் மீட்பு

சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 15
வட்டுக்கோட்டை - பொன்னாலை கடற்கரையில் 240 கிலோகிராம் கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாண 14

## கொழும்பு கோட்டை – கே.கே.எஸ். இந்த மாதத்துக்குள் தினசரி ரயில்!

யாழ்ப்பாணம், ஜூன் 15
கொழும்பு கோட்டை - காங்கேசன்துறை இடையிலான ரயில்சேவை இந்த மாதத்தின் இறுதிக்குள் தினசரி இயங்கக்கூடிய வகையில் செயற்படுத்தப்படும் என்று ரயில்வே திணைக்களம் 14

## போதைப்பொருளுடன் கைதானோரை தடுப்பில் வைத்து விசாரிக்க அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 15
யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் போதைமாத்திரைகளுடனும், ஹெரோய்னுடனும் கைதுசெய்யப்பட்ட நபர்களை, பொலிஸாரின் தடுப்புக் காவலில் 14



## டெஸ்ட் உலகக்கிண்ணம் தென்னாபிரிக்கா சம்பியன்

27 ஆண்டுகாலத் தவம் நிறைவேறியது

விரிவு பக்கம்:- 11

முச்சந்தி முரளி

'அரசியல் எண்டாலே சாக்கடைதானே எண்டது அமைச்சருக்குத் தெரியாது போல'

காங்கேசன்துறைப் பிரிவுக்குட்பட்ட

## பொலிஸ் நிலையங்கள்மீது தாக்குதல் நடத்துவோம்!

தொலைபேசியில் வந்தது மிரட்டல்
பொலிஸார் தீவிரமான விசாரணை

யாழ்ப்பாணம், ஜூன் 15
காங்கேசன்துறைப் பிராந்தியத்துக்கு உட்பட்ட பொலிஸ் நிலையங்கள் தாக்கப்படும் என்று காங்கேசன்துறை பிரதான பொலிஸ் நிலையத்துக்கு 14

## பொலிஸ் நிலையங்களுக்கு மிரட்டல் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்!

பதில் பொலிஸ்மா அதிபர் உதயனுக்குத் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 15
காங்கேசன்துறை பொலிஸ் நிலையங்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பில் காத்திரமான விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன என்று பதில் 14

வடக்கில் வன்முறை

## மே மாதம் வரை 301 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 15
வடக்கு மாகாணத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை வழிப்பறி, கொள்ளை, கொலைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டுகளின் பிரகாரம் 301பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று 14

## உடைமையில் ஹெரோய்ன்; இளைஞர் கைதானார்!

யாழ்., ஜூன் 15
2 கிராம் 150 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட் 14

காங்கேசன் - நாகப்பட்டினம்

## படகுச் சேவையை மேம்படுத்த இந்தியா ரூ.300 மில்லியன் உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 15
காங்கேசன்துறைக்கும் நாகப்பட்டினத்திற்கும் இடையிலான பயணிகள் படகுச் சேவையை மேம்படுத்துவதற்காக 300 மில்லியன் ரூபா நிதியுதவியை இந்தியா வழங்கியுள்ளது.
இந்த நிதியுதவி தொடர்பில் இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்ததாவது:- இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கடந்த ஆண்டு 14



## பண்டிதர் பரந்தாமன் காலமானார்

யாழ்ப்பாணம், ஜூன் 15
போர்க்காலத்தில் பல புரட்சிப் பாடல்களை எழுதிய பண்டிதர் பரந்தாமன் நேற்றுக் காலமானார்.
பருத்தித்துறை புலோலி புற்றளையில் வசித்துவந்த அவர், வயோதிபம் காரண 14

# சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 14.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4102 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 16 45 53 75 |
| விசேட எழுத்து | F |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 14.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1169 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 34 41 51 55 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 14.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0128 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 2 3 6 7 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 14.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2208 |
| ஆங்கில எழுத்து | I |
| சுப்பர் இலக்கம் | 18 |
| வெற்றி இலக்கங்கள் | 16 60 63 73 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 14.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5860 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 7 7 7 1 7 0 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 14.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1890 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 43 52 57 82 |
| விசேட எழுத்து | M |

**அத சம்பத**

| | |
|---|---|
| திகதி | 14.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0435 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 7 1 7 0 |

# இசைப்பிரியா, பாலச்சந்திரன் கொலை; நீதி நிலைநாட்டப்படவேண்டும்

## தென்னிலங்கை சட்டத்தரணி மனு



**கொழும்பு, ஜூன் 15**

**இலங்கையின் உள்நாட்டுப்போரின் இறுதித் தருணங்களில் சரணடைந்த இசைப்பிரியா, பாலச்சந்திரன் பிரபாகரன் உட்பட பலர் கொல்லப்பட்டமை குறித்த போர்க்குற்றச்சாட்டு விசாரணை செய்யக்கோரி தனுக ரணஞ்சக கஹந்தகமகே எனும் சட்டத்தரணி பொலிஸ்மா அதிபருக்கு மனுவொன்றைச் சமர்ப்பித்துள்ளார்.**

அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

சரணடைந்தவர்களைக் கொன்றது தொடர்பான முறைப்பாடு சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல். இந்தச் சம்பவங்கள் சர்வதேச சட்டத்தின் கீழ் போர்க் குற்றங்களின்கீழ் அடங்கும் என்பதுடன் பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

இசைப்பிரியா மற்றும் பாலச்சந்திரன் தொடர்பான சம்பவங்கள் போர்நேரத்தில் சரணடைந்தவர்களுக்கான மீறல்களைக் குறிக்கும் பிரதான எடுத்துக்காட்டுகளாகும். இவர்களின் இறப்புகள் குறித்து விசாரணை செய்யாது விடக்கூடாது.

இலங்கை பொலிஸ் உண்மை, பொறுப்பு நியாயத்துக்கு வழிவகுக்கும்வகையில் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் - என்றுள்ளார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 14.06.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0568 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கம் | 2 7 5 7 5 2 |

**Super Ball** DLB

| | |
|---|---|
| திகதி | 14.06.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2834 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 03 52 63 67 |

**சனிதா** DLB

| | |
|---|---|
| திகதி | 14.06.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 01 29 34 43 |
| வெற்றி வாரம் | 4995 |

**SASIRI** DLB

| | |
|---|---|
| திகதி | 14.06.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0704 |
| வெற்றி இலக்கம் | 17 40 49 |

**லக்ன ராசி** DLB

| | |
|---|---|
| திகதி | 14.06.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ரிஷபம் | |
| வெற்றி இலக்கம் | 11 15 22 43 |
| சீட்டிழுப்பு வாரம் | 4546 |

**KAPRUKA** DLB

| | |
|---|---|
| திகதி | 14.06.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | E |
| சுப்பர் இலக்கம் | 09 |
| வெற்றி இலக்கம் | 02 08 31 34 |
| வெற்றி வாரம் | 2010 |

**அத கோடிபதி** DLB

| | |
|---|---|
| திகதி | 14.06.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கம் | 29 43 73 74 |
| வெற்றி வாரம் | 2660 |

# சிறைச்சாலை அதிகாரிகளின் சொத்துகள் விசாரணை

கொழும்பு, ஜூன் 15

அனைத்து சிறைச்சாலை உயர் அதிகாரிகளின்சொத்துகள் குறித்து. இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை விசாரணைகளைத் தொடங்கியுள்ளன.

சிறைச்சாலை அதிகாரிகளின் சொத்துகள் குறித்து விசாரணை நடத்தக்கோரி பல்வேறு தனிநபர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகளைத் தொடர்ந்து இந்த விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன. அதன்படி, நீதிமன்ற உத்தரவுகளின் அடிப்படையில், சிறைச்சாலை அதிகாரிகளின் வங்கிக் கணக்குகள், வாகனங்கள் மற்றும் சொத்துகள் உள்ளிட்ட அனைத்து சொத்துகளிலும் முழுமையான விசாரணை நடத்தப்படவுள்ளது. (ச-இ)

# காரைக்காலில் கழிவகற்றும் செயற்பாடுகளைத் தடுப்போம்

## நல்லூர்ப் பிரதேசசபை புதிய தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

விரைவில் காரைக்கால் திண்மக்கழிவகற்றல் நிலையத்தில் புதிதாகக் கழிவுகளைக் கொட்டுகின்ற செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்படும். அத்துடன் எதிர்வரும் காலங்களில் அங்கிருக்கின்ற கழிவுகள் படிப்படியாக அகற்றப்பட்டு அந்தப் பிரதேசத்தின் புனிதத்தன்மை பாதுகாக்கப்படும் என்று நல்லூர் பிரதேசசபையின் புதிய தவிசாளர் மயூரன் தெரிவித்துள்ளார்.

நல்லூர்ப் பிரதேசசபையின் புதிய தவிசாளர் தெரிவுக்கான கூட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிரதேசசபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றபோது புதிய தவிசாளராகத் தெரிவான பின்னர் கன்னி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாகக் காரைக்கால் திண்மக்கழிவகற்றல் இடத்தில் நடைபெறுகின்ற சமூக சீர்கேடான மற்றும் சமூக விரோத செயல்கள் தொடர்பிலும் கவனம் செலுத்துகின்றேன். எமது கடந்த ஆட்சிக்காலத்தின் இறுதிக்காலகட்டத்தில் குறித்த இடத்தினை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் என்னால் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், குறுகிய காலத்தில் அவை செயல்வடிவம் பெறவில்லை.எனவே கடினமான விடயத்தினை மீண்டும் ஒருமுறை சாத்தியமாக்கும் வகையில் செயலாற்றுவேன்.

அத்துடன் நல்லூர்ப் பிரதேசவாழ் மக்களின் அடிப்படைத் தேவைகளான திண்மக் கழிவகற்றல், வீதிகள், மின்விளக்குகள், வடிகாலமைப்புப் போன்ற பல தேவைகளை முன்னகர்த்துவதற்கும் நடவடிக்கை எடுப்பேன்- என்றார். (ச-66-26)



# கரைச்சிப் பிரதேசசபை கன்னியமர்வு ஆரம்பம்

கிளிநொச்சி, ஜூன் 15

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபையின் கன்னியமர்வு தவிசாளர் அருணாச்சலம் வேழமாலிகிதன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

37 உறுப்பினர்களைக்கொண்ட கரைச்சிப் பிரதேசசபையில் இலங்கைத் தமிழரசுக்கட்சி சார்பாக 20 உறுப்பினர்களும், தேசிய மக்கள் சக்தி சார்பாக 6 உறுப்பினர்களும், ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி சார்பாக 4 உறுப்பினர்களும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக 2 உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக 2 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி சார்பாக ஒரு உறுப்பினரும், சுயேச்சைக்குழு சார்பாக 2 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். கரைச்சிப் பிரதேசசபையை தமிழரசுக்கட்சி பெரும்பான்மை ஆசனங்களைக்கொண்டு ஆட்சியமைத்தது குறிப்பிடத்தக்கது. (ச-113)

# தேசபந்துக்கு எதிராக நால்வர் சாட்சியம்

கொழும்பு, ஜூன் 15

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிராக இடம்பெற்றுவரும் விசாரணைகளில் கடந்த புதன்கிழமை நான்கு பேர் சாட்சியமளித்துள்ளார்.

நாளை திங்கட்கிழமை முதல் தினமும் விசாரணைகளை நடத்துவதற்கு விசாரணைக்குழு தீர்மானித்துள்ளது. (ச-41-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்

# 5 மாதங்களில் எண்மர் கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 15

கடந்த ஐந்துமாத காலப்பகுதியில் வடமாகாணத்தில் எண்மர் கொலைசெய்யப்பட்டுள்ளனர் என வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

வடக்கின் ஐந்து மாவட்டங்களிலுமுள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவுசெய்யப்பட்ட தரவுகளின் பிரகாரம் கடந்த ஜனவரி மாதம் முதல் மே மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 8 கொலைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 23 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-125)

# நீரில் மூழ்கி 21 பேர் பலி

யாழ்ப்பாணம், ஜூன் 15

இந்த வருடத்தின் ஜனவரி மாதம் முதல் மே மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 21பேர் நீரில் மூழ்கி இறந்துள்ளனர் என வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைவாக இந்த இறப்புகள் பதிவாகியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-125)




# விசேட தேவையுடையோரின் தேவைகளை உறுதிசெய்க

## கருவி நிறுவனம் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், ஜூன் 15**

**ஏனைய பிரஜைகள் போன்று மாற்றுத்திறனாளர்களின் அடிப்படை வசதிகள் உறுதிப்படுத்தும் பொறிமுறையை வகுக்கவேண்டும் என்று கருவி நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.**

யாழ்: ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் குறித்த அமைப்பின் நிர்வாகிகளால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அவர்கள்மேலும்தெரிவிக்கையில், மாற்றுத்திறனாளிகளும் இந்த நாட்டின் பிரஜைகளே. அவர்களும் சகல உரிமைகளும் பெற்று உறுதியாக வாழ வழிவகுக்க வேண்டும். ஆனால் எமது நாட்டில் அத்தகைய ஒரு நிலையான பொறிமுறை இல்லாதுள்ளது.

குறிப்பாக பாடசாலைகள், தொழில் இடங்கள், பொதுப் போக்குவரத்து உள்ளிட்ட இடங்களில் அல்லது சேவைபெறும் இடங்களில் நாளாந்தம் பல்வேறு இடர்பாடுகளை அவர்கள் சந்திக்கநேரிடுகின்றது. எனவே அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து தீர்வுகளைத் தரவேண்டும். குறிப்பாக சமூக சேவைகள் அதிகாரிகள் இதில் அதிக அக்கறை எடுத்து ஒரு பொறிமுறையை உருவாக்கி மனிதநேயத்தை உறுதிசெய்ய வேண்டும் - என்றனர். (ச-27)

### யாழ்.மாவட்டத்தின்

# ஒருங்கிணைப்புக்குழு அலுவலகம் திறப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அலுவலகம் நேற்று சனிக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகரால் திறந்துவைக்கப்பட்டது. இதன்போது யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அலுவலகத்தின் இணைப்பாளரான சுந்தரமூர்த்தி கபிலனுக்கான நியமனக்கடிதம் அமைச்சர் சந்திரசேகரால் வழங்கிவைக்கப்பட்டது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன், மாவட்ட மேலதிக செயலர் (காணி) க. ஸ்ரீமோகனன், மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் இ. சுரேந்திரநாதன், மாவட்டச் செயலகப் பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரன் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-66,9,27)

# சந்தோஷ் ஜாவுடன் திலித் எம்.பி. சந்திப்பு

கொழும்பு, ஜூன் 15

சர்வஜன அதிகாரத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர, இந்தியத்தூதுவர் சந்தோஷ் ஜாவை நேற்று கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது சமகால அரசியல் நிலைமைகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் இந்திய விபத்துத் தொடர்பில் திலித் ஜயவீர இந்திய உயர்ஸ்தானிகரிடம் கவலை வெளியிட்டார். (ச-இ)

# மணல் கடத்திய டிப்பர் மடக்கிப்பிடிப்பு

## சாரதி கைது



யாழ்ப்பாணம், ஜூன் 15

மாங்குளம் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுமதிப்பத்திரமின்றி ஆற்று மணல் ஏற்றிவந்த டிப்பரை சாவகச்சேரிப் பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு மடக்கிப்பிடித்துள்ளதுடன் அதன் சாரதியையும் கைதுசெய்துள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ்நிலையப் போதைப் பொருள் மற்றும் குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசேட வாகனச் சோதனை நடவடிக்கையின்போதே இந்தச் சட்டவிரோத செயல் முறியடிக்கப்பட்டது.

சந்தேகநபரையும் சான்றுப்பொருள்களையும் நீதிமன்றில் முற்படுத்த சாவகச்சேரிப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-28)



சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டை நோக்கிய வேலைத்திட்டத்தில் 16ஆவது அம்சமாகிய 'விவசாயத்துறைக்கு நீர்வசதி வழங்குதல்' எனும் கருப்பொருளில் கல்லூரியின் 2005ஆம் ஆண்டு உயர்தர அணியினரால் குறித்த திட்டம் நிர்மாணிக்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை கல்லூரியின் விவசாயத்துறையிடம் கையளிக்கப்பட்டது. (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பதவிகளுக்காக முட்டிமோதுகின்ற தமிழ்த்தலைவர்களால் பயனில்லை

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் ஆதங்கம்

**வவுனியா, ஜூன் 15**

**தமிழ் அரசியல்வாதிகளின் ஒரே குறிக்கோள் பதவியைத் தக்கவைத்து உயிர் வாழ்வதே. அவர்கள் எந்தத் தொலைநோக்குப் பார்வையும் இல்லாதவர்கள். நாங்கள் அவர்கள் மீது நம்பிக்கையிழந்துள்ளோம் எனக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.**

வவுனியாவில் நேற்று அவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் குறிப்பிடுகையில், போரின் இறுதிக்கட்டத்தின் போதும் அதற்குப் பின்னரும் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளின் தமிழ்த் தாய்மார்களான எங்கள் போராட்டப் பயணம் 3036 ஆவது நாளாகத் தொடர்கின்றது.

எங்கள் குழந்தைகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற தவிப்போடு மட்டுமன்றி, இனப்படுகொலையிலிருந்து எதிர்காலத் தலைமுறையினரைப் பாதுகாக்கவும், தமிழர் இறையாண்மைக்கு சர்வதேச ஆதரவைக் கோரவும், அமெரிக்க ஐரோப்பிய ஒன்றியம் ஒரு காலத்தில் எங்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அழைப்புவிடுக்கிறோம். இன்று இலங்கையின் வடக்கு, கிழக்கு இராணுவ ஆக்கிரமிப்பின்கீழ் உள்ளது. புலனாய்வு அமைப்புகள் பொதுமக்கள் வாழ்க்கையை ஆதிக்கம் செலுத்துகின்றன.

நாங்கள் தமிழ் அரசியல்வாதிகள்மீது நம்பிக்கையிழந்துள்ளோம். அவர்களின் ஒரே குறிக்கோள் பதவிகளைத் தக்கவைப்பதே என்று தெரிகிறது. சர்வதேச ஈடுபாட்டின்மூலம் இறையாண்மையைப்பெற்ற பிற ஒடுக்கப்பட்ட நாடுகளிடமிருந்து கற்றுக்கொள்ள எந்த முயற்சியையும் காட்டவில்லை.

எனவே தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள ஒவ்வொரு தமிழரும் எழுந்து சர்வதேச நீதியைக் கோரவேண்டும் என்றும் நாங்கள் அழைப்புவிடுக்கிறோம் - என்றனர். (ச-110)




## இராணுவத்தினரால் குருதிக்கொடை

மன்னார், ஜூன் 15

உலக இரத்ததான தினத்தை முன்னிட்டு இராணுவத்தின் 543 ஆவது படைப்பிரிவு ஏற்பாடுசெய்த இரத்த தானமுகாம் நேற்று சனிக்கிழமை மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனையில் இடம்பெற்றது.


இதன்போது கலந்துகொண்ட தள்ளாடி, கள்ளியடி, மாதோட்டம், பேசாலை ஆகிய இராணுவமுகாம்களைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் பங்கேற்று குருதிக்கொடையளித்தனர். (ச-56)



## சிவகங்கை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

காங்கேசன்துறை- நாகபட்டினம் இடையே பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் சிவகங்கைக் கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கப்பல் சேவையின் இலங்கைக்கான இயக்குநர்சத்திய சீலன் தெரிவித்துள்ளார். அசாதாரண காலநிலை காரணமாக கப்பல்சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்தக் கப்பல்சேவை எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் மீண்டும் சேவையில் ஈடுபடும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-27)



## மரக்குற்றிகள் கடத்தல் சந்தேகநபர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஜூன் 15

முக்கொம்பனில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு நீண்டகாலமாக பெறுமதியான காட்டு மரக்குற்றிகளை பட்டா ரக வாகனத்தில் சூட்சுமமான முறையில் கடத்திவந்த ஒருவர் நேற்று சாவகச்சேரிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி பாலிதசெனவிரத்னவின் வழிகாட்டலின் கீழ் செயற்பட்டுவரும் போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல் தடுப்புப் பிரிவின் பொலிஸ் சார்ஜன் கருணாரத்ன தலைமையிலான குழுவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றது.

சங்குப்பிட்டிப் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 45 பாலைமரக்குற்றிகளும் குறித்த பட்டா ரக வாகனமும் கைப்பற்றப்பட்டன. 28 வயதான சந்தேகநபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார். (ச-28.23)

## குழுமோதல்; ஒருவர் பலி!

கொழும்பு, ஜூன் 15

ராகமை, வல்பொல்ப் பகுதியில்இருகுழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் 26 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது. இந்தச் சம்பவம் இரு தரப்பினருக்கும் இடையிலான நிதித்தகராறில் ஏற்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

## சண்டிலிப்பாய் பிரதேச கூட்டம்; அரச திணைக்களத்தினர் 'கட்'

யாழ்ப்பாணம், ஜூன் 15

சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அரச திணைக்களங்களின் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் பங்கேற்றாமையால் மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் எட்டப்படாது கூட்டம் நிறைவுற்றது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது பொலிஸ் சம்பந்தமான விடயங்கள் கலந்துரையாடப்பட்ட நிலையில் அவர்கள் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இதேவேளை விவசாயம் சார்ந்த விடயங்களைக் கலந்துரையாடியபோது நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளும் வருகைதரவில்லை.

அதனையடுத்து இரு திணைக்களங்களின் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளிடம் கூட்டத்துக்கு வருகை தராமைக்கான காரணத்தைக் கோருமாறு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் உத்தரவிட்டார். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



வலிமையும் உணர்ச்சியும் சாதிப்பதைவிட
பொறுமையும் காலமும் அதிகமாக சாதித்துவிடும்.
– லாபென்டெயின் –

# உலகளாவிய நெருக்கடி!

மத்திய கிழக்கில் மிகப்பெரிய அளவில் போர்மேகம் சூழ்ந்துள்ளது. ஈரான் அணுவாயுதங்களைத் தயாரிக்கும் இறுதிக்கட்டத்தை வெற்றிகரமாக எட்டிய நிலையில், 'ஈரானின் நகர்வுகள் தனது இருப்புக்கான ஆபத்து' என்றுகூறி இந்தத் தாக்குதலை ஆரம்பித்துள்ளது இஸ்ரேல். ஈரானின் இராணுவ உயர்மட்டத் தளபதி, அணு விஞ்ஞானிகள் என 78 பேர் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட நிலையில், ஈரானும் தற்போது வலுவான பதிலடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. ஒட்டுமொத்த உலக அமைதியையும், வர்த்தகத்தையும் தளம்பலடையச் செய்யக்கூடிய வகையில்தான் மத்திய கிழக்கு வல்லரசுகளுக்கு இடையிலான மோதல் அமைந்திருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளும், உலக நாடுகளும் அமைதியை வலியுறுத்துகின்ற நிலையில், அத்தகைய அமைதியை இரு நாடுகளும் ஏற்படுத்திக்கொள்ளுமா? என்பது சந்தேகம்தான். ஏனெனில், இஸ்ரேல் வெறும் கருவி மட்டும்தான். இஸ்ரேலை ஆட்டுவிப்பது என்னமோ அமெரிக்காவும், அதன் அதிபர் ட்ரம்பும்தான். ஈரானுக்கு எதிரான நிலைப்பாடுகளை உடையவர்தான் ட்ரம்ப். அவருடைய முதலாவது ஆட்சிக்காலத்திலும் ஈரானை மையப்படுத்தி மிகப்பெரிய போர்ப்பதற்றம் ஏற்பட்டிருந்தது. எனவே, அதன் அடுத்தகட்ட நடவடிக்கையாக இடம்பெறும் தற்போதைய மோதல்கள், தொடர்வதும் முடிவதும் இஸ்ரேலின் தீர்மானங்களில் மட்டும் தங்கியிருக்கவில்லை.

ஈரான் - இஸ்ரேல் இடையிலான மோதல் ஏற்பட்ட மறுகணமே கச்சா எண்ணெய் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. வான் பறப்புகளையும், கப்பல் வழித்தடங்களையும் மாற்றவேண்டிய நிலைக்கு வர்த்தகப் பெருநிறுவனங்களும் உலக நாடுகளும் தள்ளப்பட்டுள்ளன. இவையெல்லாம் உலகளாவிய வர்த்தகத்தில் செயற்கையான தளம்பல் நிலையையும், விலையேற்றத்தையும், பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளன. அதிலும் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் பொருளாதாரமும் பாதாளத்தில் விழக்கூடிய அச்சப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இலங்கை உள்ளிட்ட வளர்ந்துவரும்நாடுகளில்பல்லாயிரம் தொழிலாளர்கள் இஸ்ரேலிலும், இதர மத்திய கிழக்கு நாடுகளிலும்தான் பணிபுரிகின்றனர். குறிப்பாக மத்திய கிழக்கின் கட்டுமானப் பணிகள்தான் பல்லாயிரம் குடும்பங்களை இங்கு வாழ்வித்துக்கொண்டிருக்கின்றன. இவ்வாறான நிலையில், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான மோதலால் ஏற்பட்டுள்ள நிலையற்ற தன்மை, நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தும் துறைகளில் ஒன்றாக கட்டுமானத்துறையும் காணப்படுகின்றது. எனவே, இதனால் இலங்கைக்கு ஏற்படப்போகும் பாதிப்பும் அதிகம். மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதலால், உலக நாடுகள் விலையேற்றங்களாலும், வர்த்தகச் சுழற்சி இல்லாமலும் பாதிக்கப்படும் என்றால், இலங்கை அவற்றுக்கு அதிகமாக தொழில் இழப்புகளையும் சந்திக்கவேண்டியிருக்கும்.

மத்திய கிழக்கில் ஈரான் பலமிழந்தால், இஸ்ரேலின் அடுத்த இலக்காக சவூதியே காணப்படும். இதை உணர்ந்துகொண்ட சவூதி, ஷியா - சன்னி பேதங்களையெல்லாம் புறமொதுக்கிவிட்டு, இந்தப் பதற்றத்தில் தன்னையும் திணிப்பதற்கு எத்தனிக்கின்றது. ஆக, உலக நாடுகளால் கட்டுப்படுத்தமுடியாத வகையில், விடயம் கைமீறிப்போகின்றது என்பதே உண்மை.




# ஜேர்மன் அமைச்சருடன் ஜனாதிபதி அநுர சந்திப்பு



கொழும்பு, ஜூன் 15

ஜேர்மனிக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, ஜேர்மன் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சர் ரீம் அலபலிரடொவனை சந்தித்துக் கலந்துரையாடினார்.

உலகளாவிய புதிய பொருளாதார மாற்றங்களின்போது இரு நாடுகளும் எதிர்நோக்கும் பொதுவான சவால்கள் தொடர்பாக இதன்போது விசேட கவனம்செலுத்தப்பட்டதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்தக்கூடிய துறைகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன. இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பின் நீண்ட வரலாற்றை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் போன்ற தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கும் மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளின் முன்னேற்றத்துக்காகவும் ஜேர்மனி வழங்கும் பங்களிப்புக்கு தனது நன்றியைத் தெரிவித்தார். (ச-இ)

# குழந்தைகள் அவதானம்

கொழும்பு, ஜூன் 15

குழந்தைகளுக்கு காய்ச்சல், சளி, இருமல் இருக்குமானால் பாடசாலை அனுப்புவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையின் குழந்தை மருத்துவ நிபுணர் டொக்டர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். டெங்கு, சிக்கன்குனியா அல்லது இன்ப்ளூயன்ஸா உள்ள குழந்தைகள் பாடசாலை மற்றும் பாலர் பாடசாலைக்குச் சென்றால், அவர்கள் ஓடிக் குதித்து விளையாடும்போது உயிருக்கு ஆபத்தான நிலைமைகள்கூட ஏற்படலாமெனவும் அவர் கூறினார். (ச-இ)

# கடற்பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 15

பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்புத் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிலாபத்தில் இருந்து புத்தளம் மற்றும் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையிலும், காலியிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையிலும் உள்ள கடற்கரைக்கு அப்பால் உள்ள கடற்பகுதிகளுக்கு இவ்வாறு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடல்சார் மற்றும் மீன்பிடிச் சமூகங்கள் மறு அறிவிப்பு வரும்வரை மேற்குறிப்பிட்ட கடற்பகுதிகளுக்குப் பயணம்செய்யவேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

# எரிந்தநிலையில் பொலிஸ் சடலமாக மீட்பு!

கொழும்பு, ஜூன் 15

நீர்கொழும்பு கொச்சிக்கடை, கம்மல்தொட்டுபொலக் கடற்கரையில் நேற்று முச்சக்கரவண்டிக்குள் இருந்து எரிந்தநிலையில் பொலிஸ் அதிகாரி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் நீர்கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 56 வயதுடைய பொலிஸ் வாகனச் சாரதி என அடையாளம் காணப்பட்டுள்ளார். சம்பவம் குறித்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)



# கொழும்பு வந்த துருக்கிக் கப்பல்!

கொழும்பு, ஜூன் 15

துருக்கிய கடற்படைக் கப்பலான 'டி.சி.சி. புயுகடா' உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கொழும்புத் துறைமுகத்தை நேற்று சனிக் கிழமை வந்தடைந்துள்ளது. இக்கப்பல் நாட்டில் தங்கியிருக்கும் காலத்தில் அதன் பணிக்குழுவினர் நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று முக்கியமான இடங்களைப் பார்வையிடவுள்ளனர். இந்தக் கப்பல் உத்தியோகபூர்வப் பயணத்தை முடித்துக்கொண்டு நாளை திங்கட்கிழமை நாட்டிலிருந்து புறப்படவுள்ளது. (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். தந்தை வழியில் செலவுகள் ஏற்படக்கூடும். சகோதரர்கள் உதவி கேட்டுவருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பிற்பகலுக்குமேல் உறவினர்கள் வருகை சில சங்கடங்களை ஏற்படுத்தினாலும், பாதிப்பு எதுவும் இருக்காது.

**இடபம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். தாயின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்ச்சி அடைவீர்கள்.

**மிதுனம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். தாயின் தேவைகளை நிறைவேற்றுவதில் சிறிது அலைச்சல் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்படும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**கடகம்:** உற்சாகமானநாள். புதிய முயற்சிகளை காலையிலேயே தொடங்கிவிடுவது நல்லது. சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தருவதாக அமையும்.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும். ஆனால், உடல்நலனில் சற்றுக் கவனம் தேவைப்படும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முடிவுகளைத் தெளிவாகச் சிந்தித்து எடுப்பீர்கள். இளைய சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**துலாம்:** மகிழ்ச்சிதரும் நாளாக அமையும். எதிர்பாராத பணவரவுக்குவாய்ப்பு உண்டு. ஆனால், புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும். மாலையில் விருந்து விசேஷங்களில்கலந்துகொள்ளும் வாய்ப்புஏற்படும்.

**விருச்சிகம்:** அதிர்ஷ்டகரமான நாள். எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையே இருந்துவந்த கருத்துவேறுபாடு விலகி அந்நி யோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். தேவையற்ற செலவுகள் ஏற்படும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தந்தையுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உண்டு என்பதால் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**மகரம்:** உற்சாகமான நாளாக இருக்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனால், சகோதரவகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். தந்தையுடன் இருந்து வந்த கருத்துவேறுபாடு நீங்கி, தந்தையின் அன்பும் ஆதரவும் கிடைக்கும்.

**கும்பம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள்கடுமையாகப்பேசினாலும்பொறுமை அவசியம்.

**மீனம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. இன்று எந்த விஷயத்திலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும்.

படங்கள்: ஐ.சிவசாந்தன்



பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் தேர்ப்பவனி நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை மாலை ஆயிரக்கணக்கான பக்தர்கள் சூழ பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (ச-41-17)








## ஓட்டோக்களுக்கு மீற்றர்; வவுனியாவில் பொருத்தல்

வவுனியா, ஜூன் 15

வவுனியாவில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்தும் செயற்பாடு முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எஸ். ரவீந்திரன் தலைமையில் நேற்று சனிக்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதுவரைகாலமும் வவுனியா மாவட்டத்தில் முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்தாமையினால் பாவனையாளர்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டிருந்தநிலையில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. முதலாவது கிலோமீற்றருக்கு 130 ரூபாவும் இரண்டாவது மீற்றரிலிருந்து கிலோமீற்றருக்கு 100 ரூபாவும் அறவிடுவதற்கான திட்டம் இதனூடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ச-41-110)




## திருமலை தமிழ்ச்சங்கத்தின் வசந்தகாலப் பெருவிழா

திருகோணமலை, ஜூன் 15

திருகோணமலை தமிழ்ச்சங்கம் முன்னெடுத்த 'வசந்த கால பெருவிழா' கடந்த செவ்வாய்க்கிழமை உவர் மலை விவேகானந்த கல்லூரிக் கலையரங்கில் திருகோணமலை தமிழ்ச்சங்கத்தின் தலைவர் திருமலை நவம் தலைமையில் இரு அரங்குகளாக நடைபெற்றது. காலை அரங்கில் பிரதம விருந்தினராகக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கே. குணநாதன் கலந்துகொண்டார். காலை அரங்கில் யாழ்ப்பாண தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், உபதலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் இணைத்தலைமையில் ஆய்வரங்கம் இடம்பெற்றது. கிழக்குப் பல்கலைக்கழக கலாசாரப் பீடாதிபதி முனைவர் குணபாலசிங்கம், முனைவர் ரூபி வலன்ரீனா பிரான்சிஸ், தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் றமீஸ் அப்துல்லா முனைவர் எம். பீர்தௌஸ் ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். மாலை அமர்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் க. சுதாகரும் சிறப்பு விருந்தினராக தென்கிழக்குப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஏ.எம்.எப் அஷ்ரப்பும் கலந்துகொண்டனர் .

கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கப் பொதுச்செயலாளர் சந்திரமௌலீசன் லலீசன், கொழும்பு தமிழ்ச்சங்கத் தலைவர் சுகந்தி இராஜகுலேந்திரா, மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத் தலைவர் வி. இரஞ்சிதமூர்த்தி, உலகத் தமிழர் பண்பாட்டு அமைப்பைச் சேர்ந்த தே. செந்தில்வேலவர் ஆகியோர் கலந்துகொண்டனர். மாலை அரங்கில் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (ச-இ)



வரலாற்றுச் சிறப்பு மிக்க இணுவில் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் திருமஞ்சத் திருவிழா கடந்த வியாழக்கிழமை இரவு வெகுசிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் நடைபெற்றது. (ச-22-66)



நெளியாய் அம்மன் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நேற்றுமுன்தினம் சிறப்புற இடம்பெற்றது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கில் முதலீடு செய்ய ஊக்குவிக்கவேண்டும்!

## மலேசியத் தூதுவரிடம் ஆளுநர் வேண்டுகோள்

**யாழ்ப்பாணம், ஜீன் 15**

**வடக்கு மாகாணத்தில் முதலீட்டு வலயங்கள் உருவாக்கப்படவுள்ள நிலையில் முதலீட்டாளர்களை அதில் முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்குமாறு இலங்கைக்கான மலேசியத் தூதுவர் பாதில் ஹிசாம் ஆடமிடம் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கோரிக்கை முன்வைத்துள்ளார்.**

யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள மலேசியத் தூதுவர், வடக்கு மாகாண ஆளுநர் தலைமையிலான குழுவினரை கடந்த வியாழக்கிழமை இரவு யாழ். நகரிலுள்ள நோர்த் கேட் ஹோட்டலில் இரவு விருந்துடன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்துக்கும் மலேசியாவுக்கும் இடையிலான பாரம்பரிய உறவுகள் தொடர்பில் மலேசியத் தூதுவர் ஆளுநருக்கு சுட்டிக்காட்டினார். யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமைகளை அவதானிப்பது தமது நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தின் தேவைப்பாடுகள், முதலீடுகளின் அவசியம் தொடர்பில் ஆளுநர் சுட்டிக்காட்டினார். விவசாயம் மற்றும் கடலுணவு தொடர்பான வளங்கள் வடக்கில் நிறைந்துள்ளன எனவும் அவற்றை பெறுமதி சேர் உற்பத்திப்பொருள்களாக ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் அரிது என்றும் ஆளுநர் தெரியப்படுத்தினார். எதிர்காலத்தில் அமையவுள்ள முதலீட்டு வலயங்களை நோக்கி மலேசிய முதலீட்டாளர்களை ஊக்குவிக்குமாறும் கேட்டுக்கொண்டார். முதலீட்டுக்கான வாய்ப்புகள் தொடர்பான தெளிவான வரைபடத்தைக்கோரிய தூதுவர், முதலீட்டாளர்களுக்கான அனுமதிகள், சலுகைகள் தொடர்பில் விரைவான நடைமுறை தேவை என்றும் குறிப்பிட்டார். ஏனைய சில நாடுகளில் உள்ள விரைவு நடைமுறைகள் தொடர்பிலும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-113)

## மருத்துவர் ஒழுங்கீனம் முறையிடலாம்

கொழும்பு, ஜீன் 15

அரசமருத்துவமனைகளில் கடமையாற்றும் மருத்துவர்கள் நோயாளிகளுடன் ஒழுங்கீனமாக நடந்துகொண்டால் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடம் முறைப்பாடு செய்யுமாறு இலங்கை மருத்துவசபைப் பதிவாளர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசமருத்துவமனைகளில் கடமையாற்றும் மருத்துவர்கள் நோயாளிகளுடன் ஒழுங்கீனமாக நடந்துகொள்வதாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. மருத்துவர்கள் நோயாளிகளுடன் பொறுமையாகவும், பண்பாகவும் நடந்துகொள்ளவேண்டும். அவ்வாறு நடந்துகொள்ளாத பட்சத்தில் பொதுமக்கள் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடம் முறைப்பாடுசெய்யலாம். அவர் முறைப்பாடு தொடர்பாக புலன்விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-41-6)

## இயற்றாலை விபத்தில் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜீன் 15

வரணி - இயற்றாலைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பவுசர் வாகனத்துடன் பின்னால் சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த இருவரே படுகாயமடைந்துள்ளனர்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-28)



## குருதிக்கொடையாளர் ஜீன் 28 கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜீன் 15

வடமாகாணப் பிராந்திய இரத்த வங்கியாகிய யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கி, தெல்லிப்பழை, பருத்தித்துறை, கிளிநொச்சி,முல்லைத்தீவு மற்றும் சாவகச்சேரி இரத்தவங்கிகள் ஆகியவற்றில் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்தவர்களையும், இரத்ததானமுகாம் ஒழுங்கமைப்பாளர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக யாழ். போதனா மருத்துவமனையின் இரத்தவங்கிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் குருதியின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. எனவே பெறுமதிமிக்க உயிர்களைக் காப்பாற்ற அனைவரும் முன்வரவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-22,66)

## நிறைவேற்று அதிகாரியின்றி மருந்துகள் ஒழுங்குபடுத்தல்

கொழும்பு, ஜீன் 15

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார்சபை பிரதம நிறைவேற்று அதிகாரி பதவி வெற்றிடமாகக் காணப்படுவதாகவும் பிரதம நிறைவேற்று அதிகாரி இல்லாமலே தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை செயற்பட்டுவருவதாகவும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைத் தலைவர் ஆனந்த விஜயவிக்கிரம தெரிவித்துள்ளார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை பிரதம நிறைவேற்று அதிகாரி பதவி ஒரு முக்கியமான பதவி. இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

கடந்த வாரம் தனது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து பிரதம நிறைவேற்று அதிகாரி மருத்துவர் செமகே தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்தே இந்தப் பதவி வெற்றிடமாகக் காணப்படுகிறது. மருத்துவர் செமகே பற்றி சமூக ஊடகங்களில் அவதூறு பரப்பியவர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-41-6)

## நீதிக்கான நீண்ட காத்திருப்பு ஆவணப்படம் திரையிடல்!


வவுனியா, ஜீன் 15

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் பிரச்சினைகளை மையமாகக்கொண்ட "நீதிக்கான நீண்ட காத்திருப்பு" ஆவணப்படம் வவுனியாவில் நேற்று திரையிடப்பட்டது.

எழுநாவின் தயாரிப்பில் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த ஆவணப்படம் அமரர் அச்சுதநாயர் சேகுவராவால்(இசைப்பிரியன்)தொகுக்கப்பட்டது. அவர் மரணித்துள்ள நிலையில் அவருக்கான அஞ்சலி நிகழ்வும் நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் காணாமலாக்கப்பட்ட உறவுகளின் பெற்றோர், உறவினர்கள்,குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் கோமகன், நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம், மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டிருந்தனர். (ச-110)








## மைத்திரிக்கு எப்படிப் பணம்? விசாரணை செய்யுங்கள்


கொழும்பு, ஜூன் 15

உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல் தொடர்பில் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட நான்கு அதிகாரிகளும் 310 மில்லியன் ரூபாவை இழப்பீடாகச் செலுத்தியிருந்தனர். மைத்திரிபால சிறிசேன நூறு மில்லியன் ரூபாவை இழப்பீடாகச் செலுத்தியிருந்தார்.

இந்தப் பணம் எவ்வாறு கிடைத்தது என்பது பற்றி விசாரணை நடத்த வேண்டும் என சமூக செயற்பாட்டாளர் ஒருவர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். சிறாந்த அமரசிங்க என்ற சமூக செயற்பாட்டாளரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார். (ச-33-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
13 . 05 . 1947

மறைவு
25 . 06 . 2024

## அமரர் பொன்னுத்துரை கமலநாதன்

(ஓய்வுபெற்ற அதிபர், யூனியன் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி)

அப்பா!
அன்புடன் ஆற்றல் புலமை
பண்புடன் தன்ன டக்கம்
கொண்ட நற் சேவையாலே
குன்றொளிர் தீபம் ஆனீர்!
நன்றென நாம் வாழ
நல்வழி காட்டி நின்றீர்!
ஆண்டு பல சென்றிடினும்
உம் நினைவை நாம் மறவோம்!

முருகேச பண்டிதர் வீதி,
சுன்னாகம் தெற்கு.

(CS/58553) J-1


குடும்பத்தினர்

# குஷ் போதையுடன் இளைஞர் கைது

கொழும்பு, ஜூன் 15

வெலிக்கடைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தரமுல்ல தியனப் பூங்காவில் குஷ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்றுக்கைது செய்யப்பட்டுள்ளார். 25 வயதுடைய சந்தேகநபரிடமிருந்தே 205 கிராம் குஷ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. (ச-இ)

# மரண அறிவித்தல்



தோற்றம்
23 . 04 . 1959

மறைவு
14 . 06 . 2025

## பொன்னுச்சாமி கந்தசாமி

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும், சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி கந்தசாமி அவர்கள் நேற்று (14.06.2025) சனிக்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

(CS/ 58586) J-1

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



மலர்வு
18 . 03 . 1936

உதிர்வு
11 . 06 . 2025

## மகேஸ்வரி பாலச்சந்திரன்

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

யாழ்ப்பாணம் காரைநகர் வேதரடைப்பைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. மகேஸ்வரி பாலச்சந்திரன் அவர்கள் கடந்த (11.06.2025) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் பாலச்சந்திரன் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி - மதியயாபரணம், பாலசிங்கம், ராஜசிங்கம், துரைசிங்கம், குலசிங்கம் - வீரவாகு, .ரத்தினசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சற்சொரூபவதி, யோகேஸ்வரன், இந்திரா, மோகனா, கனகநிதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுபமுரளிதரன், வானதி, நடேஸ்வரன், மகேஸ்வரன், ஆதிசிவம் ஆகியோரின் அன்பு மாமியாரும், துவாரகன் - ஜெனனி, அபிராம், ஆரணி, ஆரதி, திவ்யா, மாதவன், மயூரன், மேதா, மாயோன், ஹரீஷ்மா, ரேஷ்மா, அருணசிவம் ஆகியோரின் அன்புப் பேத்தியும், விஷ்ணுவின் ஆருயிர்ப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 3 மணிவரை பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைத்து மாலை 3 மணியளவில் இறுதிக்கிரியைகள் செய்யப்பட்டுத் தகனக் கிரியைகளுக்காகக் கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.


சற்சொரூபவதி - 071 279 6299, 076 191 1199
யோகேஸ்வரன் - +1 (604) 771 1604
இந்திரா - +1 61 411 766 857
மோகனா - +1 (626) 437 3911
கனகநிதி - +1 (903) 368 – 2506

இல. 20, 2/1,
உருத்திரா மாவத்தை, கொழும்பு - 06

(CS/58587) J-1

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

# மரண அறிவித்தல்



மலர்வு
21 . 05 . 1943

உதிர்வு
14 . 06 . 2025

## திருமதி யுவதி செல்வநாயகம்

பாலன் வளவு தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட யுவதி செல்வநாயகம் அவர்கள் நேற்று (14.06.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சொக்கநாதன் மற்றும் பவளசேனை தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான நடராசா - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்வநாயகம் அவர்களின் அன்பு மனைவியும் ஜீவபிரதாப் (தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம்) அவர்களின் அன்புத்தாயாரும், ஷயந்தினியின் (முன்னாள் ஊழியர் மக்கள் வங்கி) அன்பு மாமியாரும் ஜஸ்விந்தன் (யா/யாழ் இந்துக் கல்லூரி- தரம் 10), நிருஷி (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை தரம் 6) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் யோகாம்மாள், யோகேஸ்வரன், யோகேஸ்வரி, கணேஸ்வரன், காலஞ்சென்ற கணேஸ்வரி மற்றும் சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும் புஸ்பமலர், காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் கமலவேணி, மனோகரன், சாந்தகுமாரி, காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் ஞானேந்திரன், காலஞ்சென்ற பகவதி, மற்றும் பூரணம், பரமேஸ்வரி, காலஞ்சென்ற பாலகணேசன் மற்றும் சிவபாலகணேசன், மங்கையற்கரசி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

272, ஸ்ரேசன் வீதி
கோண்டாவில் கிழக்கு

(CS 58578) E-1

தகவல் :
குடும்பத்தினர்
077 768 6086

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வடகொரியா நிலைமையை நாட்டில் ஏற்படுத்த முயற்சி!

## சாகர காரியவசத்துக்கு சந்தேகம்

கொழும்பு, ஜூன் 15

அரச நிறுவனங்களின் பிரதானிகளை சிறையில் அடைத்து இலங்கையில் வடகொரியா போன்றதொரு நிலைமையைத் தோற்றுவித்து ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முற்படுகின்றதா எனச் சந்தேகம் எழுந்துள்ளது.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் செயற்படும் மூன்று நிறுவனங்களின் பிரதானிகள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். அல்லது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் சிறையில் இருந்தார். தற்போது சேவையில் இல்லை. சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் பணி இடைநீக்கம் செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களப் பிரதானிக்கும் இதேநிலைதான் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழ்நிலை ஏற்புடையது அல்ல. இப்படியானதொரு நிலை ஏற்பட்டமை தொடர்பில் அரசாங்கம் பொறுப்புக்கூறவேண்டும். ஏனெனில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நாட்டின் பாதுகாப்புத் தொடர்பில் நம்பிக்கையீனம் ஏற்படும். சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளை அவமானத்துக்குட்படுத்தி, சிறையில் அடைப்பதன்மூலம தற்போதைய நிர்வாக முறைமையை வீழ்த்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

அரசாங்க நிறுவனங்களின் பிரதானிகளைக் கைதுசெய்யும்போது, விளக்கமறியலில் வைக்கும்போது கூடுதல் கரிசனை செலுத்தப்படவேண்டும். ஏனெனில் அந்தத்துறை சார்ந்து நம்பிக்கையீனம் ஏற்பட்டு, கட்டமைப்பு வீழ்ச்சியடையக்கூடும்.

ஜே.வி.பி. அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபிறகு எமக்குக் கிடைக்கப்பெற்ற அதிகாரத்தை விடமாட்டோம் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறிவருகின்றனர்.

ஜே.வி.பி.யினர் இலங்கையில் வடகொரியா போன்றதொரு நிலையை ஏற்படுத்தி தமது சகாக்கள் ஊடாக நாட்டை ஆளமுற்படுகின்றனரா என்ற சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது-என்றார். (எ-44)




## சண்டிலிப்பாய் முன்பள்ளிகளுக்கு சத்துணவுத்திட்டம் வழங்குங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 15

சண்டிலிப்பாய் பிரதேச முன்பள்ளிகளுக்கு பாரபட்சமின்றி சத்துணவுத் திட்டத்தை வழங்கவேண்டும் என முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தினர் சண்டிலிப்பாய் பிர்தேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எமது பிரதேசத்தில் 20க்கு மேற்பட்ட முன்பள்ளிகள் காணப்படுகின்றன. ஆனால் சத்துணவுத்திட்டம் சில முன்பள்ளிகளுக்கு மாத்திரமே வழங்கப்படுகின்றது. எனவே முன்பள்ளிகள் அனைத்துக்கும் சத்துணவுத்திட்டத்தை வழங்கவேண்டும் என்றும் குறிப்பிட்டனர். (ச-125)

## மயிலிட்டி கண்ணகை அம்மனுக்கு 35 வருடங்களின் பின் சித்திரத்தேர்

யாழ்ப்பாணம், ஜூன் 15

மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில் சித்திரத்தேர் வெள்ளோட்டம் 35 வருடங்களின் பின்னர் எதிர்வரும் ஜூலை மாதம் 7ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சித்திரத்தேர் வெள்ளோட்டத்தினை காண வெளியிடங்களில் இருந்துவரும் பக்தர்களின் வசதிக்காக பேருந்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1990 ஆம் ஆண்டு வலி. வடக்கு மீதான இராணுவ நடவடிக்கை காரணமாக மயிலிட்டிப் பகுதி மக்கள் இடப்பெயர்வுக்கு உள்ளாகினர். பின்னர் இராணுவத்தினரால் உயர்பாதுகாப்பு வலயமாக அபகரிக்கப்பட்டிருந்தநிலையில் சுமார் 30 ஆண்டுகளின் பின்னர் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட நிலையில் கண்ணகை அம்மன் கோவில் சித்திரத்தேர் முற்றாக சிதைந்து அழிவடைந்திருந்தது. இந்தநிலையில் ஆலயத்தையும் புனரமைத்து தற்போது புதிதாக சித்திரத்தேரையும் அமைத்து வெள்ளோட்டம் காண உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான முடிவெடுத்து இரு முதியவர்கள் பலி

கொடிகாமம், ஜுன் 15
யாழ்ப்பாணம் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், இரண்டு முதியவர்கள் நேற்றுத் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளனர்.

63, 65 வயதுடைய முதியவர்களே இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிரிழந்தவர்களாவார்கள். இரு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இந்த இறப்புகள் பதிவாகியுள்ளன. இறப்புத் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-159)

# ஐஸ் போதையுடன் கைதான 2 இளைஞர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜுன் 15
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், ஐஸ் போதைப்பொருளுடன் கைதான இரண்டு சந்தேகநபர்களை விளக்க மறியலில் வைத்து விசாரிக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
7 கிராம் 400 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கடந்த வியாழக்கிழமை இரவு கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள், நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இதன்போதே, அவர்களை விளக்கமறியலில் வைத்து விசாரிக்குமாறு நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. (ம-125)



# கைதடி சிறுவர் பூங்காவில் சுற்றுச்சூழல் நாள் நிகழ்வு



யாழ்ப்பாணம், ஜுன் 15
பசுந்தேசம் அமைப்பு, இயற்கை நண்பர்கள் இயக்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், சர்வதேச சுற்றுச்சூழல் நாள் நிகழ்வு கைதடி சிறுவர் பூங்காவில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
இதன்போது செம்முகம் ஆற்றுகைக் குழுவினரின் 'கருவுக்குள் உயிர்க்கும்' எனும் தலைப்பில் ஆற்றுகை நிகழ்வு நடைபெற்றது. அத்துடன் பசுந்தேசம் அமைப்பு நடத்திய போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கான விருதுகளும் வழங்கிவைக்கப்பட்டன.
நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், சிறப்பு அழைப்பாளர்களாக சாவகச்சேரி பிரதேசசபைச் செயலாளர் தி.சுதர்சன், யாழ்.மாவட்டச்செயலக முகாமைத்துவ சேவைகள் தலைமை நிர்வாக அதிகாரி திருமதி வசந்தினி கௌரிதரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,113)

மூத்த பெண் எழுத்தாளுமைகளில் ஒருவரான குந்தவையின் (இராசரத்தினம் சடாச்சரதேவி) 'குந்தவை கதைகள்' எனும் நூல், "காலச்சுவடு தமிழியல்" இன் வெளியீடாக வந்துள்ளது. நூலின் வெளியீட்டு விழா, மீளுகை-2 இலக்கிய அமைப்பின் ஏற்பாட்டில் எழுத்தாளர் உடுவில் அரவிந்தன் தலைமையில் ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. (ச-25,66)







கிளிநொச்சி தெற்கு வலயத்துக்குட்பட்ட மிகவும் பின்தங்கிய பாடசாலைகளில் ஒன்றான திருவள்ளுவர் வித்தியாலயத்தின் பாடசாலை மாணவர்களுக்கு முதலாவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விஜயசூர்யா தலைமையில் பாடசாலை உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (ச-41

கரணவாய் செல்வாபுரம் வீரபுத்திரர் ஆலய தேர்த்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.
இதன்போது புதிதாக அமைக்கப்பெற்ற சித்திரத்தேரில் சுவாமி எழுந்தருளியிருந்தார். (ச-22,100)



கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலய விளையாட்டு அலகின் கோரிக்கைக்கமைவாக ஸ்ரீ ராம் கட்டட ஒப்பந்த நிறுவனத்தினால் ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் பாடசாலை சமூகத்திடம் கையளிக்கப்பட்டது. (ச-2,159)

# சுயதொழில் நிலையத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜுன் 15
தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பெண்களுக்கான புதிய சுயதொழில் உற்பத்தி நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு உரும்பிராயில் கிராமிய உழைப்பாளர் சங்க அலுவலகத்தில் சங்கத் தலைவர் என்.இன்பம் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அடிக்கல் நட்டுவைத்தார். (ச-22,66)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெஸ்ட் உலகக்கிண்ணம் தென்னாபிரிக்கா சம்பியன்

## 27 ஆண்டுகாலத் தவம் நிறைவேறியது

லண்டன், ஜூன் 15

டெஸ்ட் உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் அவுஸ்தி ரேலியாவைத் தோற்கடித்து தென்னா பிரிக்கா சம்பியனாகியுள்ளது.




கடந்த 11ஆம் திகதிமுதல் நேற்று வரை இந்த ஆட்டம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா முத லாவது இன்னிங்ஸிற்காக அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 212 ஓட் டங்களைப் பெற்றது. வெப்ஸ்ரர் அதிகபட் சமாக 72 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ரபாடா 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னா பிரிக்கா அணி 138 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து பின்னடைவைச் சந்தித்தது. அதி கபட்சமாக பெட்டிங்கம் 45 ஓட்டங்க ளைப் பெற்றார். பந்துவீச்சில் கம்மின்ஸ் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் கள மிறங்கிய அவுஸ்திரேலிய அணி, 207 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுக்க ளையும் இழந்தது. அதிகபட்சமாக மிச் செல் ஸ்ராக் 58 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ரபாடா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

முதலாவது இன்னிங்ஸில் அவுஸ்திரே லியா முன்னிலை பெற்ற காரணத்தால், தென்னாபிரிக்க அணிக்கு 282 ஓட்டங் கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஆரம்ப வீரரான மார்க்கமின் அபார ஆட்டத்தால் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றிபெற்றது தென்னாபிரிக்கா. மார்க் கம் 136 ஓட்டங்களைக் குவித்தார். அவரே ஆட்டநாயகனாகவும் தெரிவா னார்.

(ம)

## வேலையாள்கள் தேவை



யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனமொன்றுக்கு, வெல்டிங் வேலை தெரிந்தவர்கள் தேவை.

பகுதிநேரமாகவும் ஒப்பந்த அடிப்படை யிலும் கடமையாற்றமுடியும்.

**கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.**

தொடர்பு:- **077 120 9998**

## மரண அறிவித்தல்



பிறப்பு - 16 - 07 - 1948

இறப்பு - 14 - 06 - 2025

### கயிலாயபிள்ளை நாகபூரணம்

மீசாலை மேற்கு மீசாலையை பிறப்பிடமாகவும் ஆசிரியர் வீதி, சங்கத்தானை சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கயிலாயபிள்ளை நாகபூரணம் அவர்கள் நேற்று (14.06.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லக்கண்டு - மாங்கையற்கரசி தம்பதியினரின் பெறாமகளும், ஆசிரியர் வீதி சாவகச்சேரியை சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா (சாத்திரி) - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், கயிலாயபிள்ளை (முன்னாள் பூசாரி - மண்டுவில் காளி கோயில்) அவர்களின் மனைவியும், வாசுகி (சுவிஸ்), உதயகுமார் (லண்டன்), கமலினி (பிரான்ஸ்), ஜெயக்குமார் (பிரான்ஸ்), உதயபாஸ்கரன் (லண்டன்), ஆகியோரின் அருமைத்தாயாரும், திருகேஸ்வரன், ஈஸ்வரி, சுரேஸ்வரன், கமலேஸ்வரி, மிதுலா ஆகியோரின் அன்பு மாமியாரும், சபூரா, சபீசன், திவானிகா, காருணியா, சயூரி, சாரிகன், அரிஸ், ஆதுசன், அக்ஷய், கவின் ஆகியோரின் அருமை பேர்த்தியும் நாராயணபிள்ளை, காலஞ்சென்ற அன்னம்மா, சந்திரா, திருநாவுக்கரசு ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை, தில்லையம்மா, சரஸ்வதி, அன்னப்பிள்ளை, திலகவதி, வடிவேலு, இராசபூபதி, சிவகுரு, மற்றும் சுகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் (17.06.2025) செவ்வாய்க்கிழமை, காலை 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ,அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆசிரியர் வீதி,
சாவகச்சேரி

தகவல்:
குடும்பத்தினர்.

# மீனவர்களிடையே மோதல் பொலிஸார் விசாரணை!

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு செம்பி யன்பற்று பகுதியில் இரு மீனவ குழுக்க ளிடையே இடம்பெற்ற மோதலில் மீனவர் ஒருவர் காயமடைந்ததார் எனக் கூறப்ப டும் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று பகு தியில் உழவியந்திரத்தைப் பயன்படுத்தி கரைவலை தொழில் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறி அங்கு சிலர் உழவியந்திரத்தைப் பயன்படுத்தி கரைவலை தொழில் செய்து வந்தனர் எனக் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது.


இந்தநிலையில் நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் செம்பியன் பற்று பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர் சங்க மொன்றின் உறுப்பினர் கள் எனத் தம்மை அடை யாளப்படுத்திக் கொண்டு தடிகளுடன் கரைவலை வாடிகளுக்கு சென்ற கும்பல் அங்கிருந்த மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் காயம டைந்த மீனவர் ஒருவர் மருதங்கேணி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்பு பருத்தித்துறை ஆதார மருத்துவம னைக்கு மாற்றப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர்.

(ச-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழிப்புணர்வுப் பேரணி

பளை, ஜூன் 15

சர்வதேச புகைத்தல் மற்றும் போதை ஒழிப்புதினத்தை முன்னிட்டு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடுசெய்த கவனவீர்ப்புப் விழிப்புணர்வுப் பேரணி கடந்த புதன்கிழமை நடைபெற்றது. போதைப்பொருளுக்கு எதிரான கருத்துரையை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆற்றியதுடன் போதைப் பொருள், புகைத்தலுக்கு எதிராக மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. (ச-33-113,9)

## காவலாளி தேவை

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள வீடொன்றுக்கு காவலாளி தேவை.

35 வயதுக்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது.


உணவு, தங்குமிடம் இலவசம்.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.



தொடர்பு :- 077 120 9998

## மரண அறிவித்தல்



### பரமசாமி சிறீதரன்

மீசாலை வடக்கு மீசாலையை பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கு மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பரமசாமி சிறீதரன் அவர்கள் நேற்று (14.06.2025) சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமசாமி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசையா மற்றும் பவளம் தம்பதிகளின் மருமகனும், சற்குணம் அவர்களின் அன்பு கணவரும், மோகனா, பிரசன்னா, கீர்த்தனா, ஆகியோரின் அன்புத் தந்தையும், கிரிதரன், நிலானி, கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பத்மாவதி, பிரபாகரன், இந்துமதி, ஜெயமதி, மனோகரன் (இத்தாலி), வரதன், பாஸ்கரன் (நோர்வே), கருணாகரன், காலஞ்சென்ற கலாவதி, பராபரன் ஆகியோரின் அன்பு சகோதரரும், முருகையா, திருச்செல்வம், சுந்தரலிங்கம், ஜெயந்தி, சிவரூபா, முத்துவேல், செல்வானந்தன், பாலச்சந்திரன், றஞ்சினி ஆகியோரின் மைத்துனரும், அஸ்மிதன், தஸ்மினா, கிருத்திகா, ஆதீசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 01.00 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனபதி மில் மீசாலை.
077 298 6179

(CR/45171) D*

தகவல்
மகன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் பள்ளிமுனையில்
# கடற்படையினர் வசமுள்ள காணிகளை விடுவியுங்கள்

மன்னார், ஜூன் 15
மன்னார் பள்ளிமுனையில் கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ள மக்கள் காணிகளை அவர்களிடமே கையளிக்க வேண்டும் என்று ரெலோத் தலைவரும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் அவரது அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அநுரகுமார ஆட்சிக்கு வந்த தன் பின்னர் முப்படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பதா கத் தெரிவித்துள்ளார். எனினும் பல இடங்கள் இன்னமும் படையினர் வசமிருந்து விடுவிக்கப்படவில்லை.

மன்னார் பள்ளிமுனை கடற்கரை வீதியில் அமைந்துள்ள கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ள தனியார் காணிகள் குறித்து நாங்கள் நாடாளுமன்றத்தில் பேசியிருந்தோம்.

ஜனாதிபதிக்கும் இதுதொடர்பாக கடிதங்கள் அனுப்பியிருந்தோம். ஆனால் தற்போது இந்தக் கடற்படை முகாம் அமைந்திருக்கும் காணிகளை வருகின்ற 20 ஆம் திகதி அளவீடு செய்யப்போவதாகத் துண்டுப் பிரசுரம் ஒட்டப்பட்டுள்ளது.

எனவே நாங்கள் அதை ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை. இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். அத்தோடு பள்ளி முனை மக்களின் காணிகளை அவர்களிடமே பகிர்ந்தளிக்கவேண்டும். அதைவிடுத்து மக்கள் போராட்டம் வெடிக்கும் வாய்ப்பை உருவாக்கவேண்டாம் - என்றார். (ச-56)


### 31ம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி சுதர்சினி சோமேஸ்வரன் அவர்களின் அன்புத்தாயார்
**அமரர் பாலசுப்பிரமணியம் உமாதேவி**
அவர்கள் இறைபதமடைந்த செய்தி அறிந்து மிகுந்த துயர் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 02.05.1944 மறைவு 16.05.2025

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

### வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீற்றர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திலும் 2 1/4 பரப்புக் காணியில் 4 அறைகள். வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
Whats app:-
**+61 421 290 240**
(CS/58843) J-1

### G.C.E.(O/L) தகைமையுடன் லன்டன்(UK) செல்வதற்கான ஓர் அரிய வாய்ப்பு
100% உத்தரவாதம்
- IELTS தேவையில்லை,
- குறைந்த கட்டணத்தில் லன்டன் செல்வதற்கான ஏற்பாடுகளை எமது நிறுவனம் செய்து கொடுக்கிறது.
- 3 நாட்கள் அதாவது மிகக்குறுகிய காலத்தில் Offer Letter- பல்கலைக்கழக அனுமதி பத்திரத்தை பெற்று விசா ஆலோசனையும் வழங்குகிறது.

உங்கள் தகைமையுடன் உடன் தொடர்பு கொள்ளுங்கள்....!

New Zealand, Malaysia, Singapore, Italy, France
போன்ற நாடுகளுக்கு துரித கதியில் விசிட் விசா மற்றும் உயர்கல்வியை தொடர Study Visaவை பெற இன்றே தொடர்புகொள்ளுங்கள்.
ஆங்கிலம் சாதாரணமாக பேசத்தெரிந்தால் போதுமனது. Payment After Visa
Family & Single Visit Visaவுக்கான ஆலோசனைகளும் வழங்கப்படும்.
3 வாரங்களில் விசாக்கள்
**0771828215**
American College of Applied Studies Pvt Ltd

### நாகபூஷணி திருமணசேவை
வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர்.மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.
359/6 கோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(துர்க்கா மணி மண்டபத்துக்கு அண்மையில்)
தொடர்புகளுக்கு:
**077 138 7596, 077 999 9306**

### வேலையாட்கள் தேவை
பண்ணை/கமம் ஒன்றில் வேலை செய்யக் கூடிய ஆண்/பெண் தேவை. விரும்பியவர்கள் விண்ணப்பிக்க இலங்கை நேரப்படி பி.ப 5.00- பி.ப 8.00 வரை விண்ணப்பம் செய்யலாம்.
Whats Appல் எழுதி விண்ணப்பம் செய்தல் விரும்பத்தக்கது.
**+94 74 137 1168**
**WhatsApp: +41 77 925 2908**

### வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
1. பரோட்டா தயாரிப்பவர்
2. Delivery Boy
3. சமையல் உதவியாளர்/ சமையலாளர் ஆண்/பெண்
அடிப்படைச் சம்பளம் - 30000/- - 75000/-
**076 982 7517**
(CS/58441) J-1

### வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Pizza, Burger செய்பவர்கள் | : 0777432777 |
| Accountant | : 0777611665 |
| Computer Operator (Typing) | : 0766273710 |
| Chef / Room Boy | : 0763057957 |
| Store keeper | : 0752668036 |
| Delivery rider(Jaffna,Vavuniya,Kilinochchi,Trinco) | : 0766233987 |
| ஆடை தொழிற்சாலை வேலை(பெண்கள்) | : 0776040400 |
| தென்னந்தோட்ட பராமரிப்பாளர் | : 0773993535 |
| பகுதி நேர வேலைவாய்ப்பு (பெண்கள்) | : 0776040400 |
| Cashier & Assistant Manager | : 0758588218 |
| All Rounder (Hotel) | : 0777258670 |
| Speech & Language Therapist | : 0775571950 |
| Chef | : 0777983933 |
| Assistant Sales Manager(Basic 60,000) | : 0779969661 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்ல் இணைய மற்றும் மேலதிக வேலைவாய்ப்புகளுக்கு: dewmasweb.com
வேலையாட்கள் தேவையா : 0760984532
DEWMAS, 51, Amman Road, Nallur

### மாபிள் வேலை
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா
(CS 29845) E-1
தொடர்பு: **077 334 1281**

### பணிப்பெண் தேவை
யாழ் திருநெல்வேலியில் அமைந்துள்ள வீடு ஒன்றிற்கு வீட்டு வேலை செய்வதற்கு பணிப் பெண் தேவை.
தொடர்பு: **077 216 2622**

### மீசாலை கிழக்கில்
காணி விற்பனைக்கு
மீசாலை கிழக்கில் வீடு கட்டுவதற்கு அல்லது வியாபாரத்திற்கு சிறந்த 5 பரப்பு நிலம் விற்பணைக்குண்டு
தொடர்பு 0776 544 540 (தரகர் தேவையில்லை)

### LIC
The Hands that Protect
Life Insurance Corporation (Lanka) Ltd.



### வேலைவாய்ப்பு
உங்களுடைய தொழில் எதிர்காலத்தை கட்டமைத்துக் கொள்ளுங்ககள்
காப்புறுதி முகவர் மற்றும் விற்பனை மேற்பார்வையாளர்

**தகமைகள்**
- 18 வயதுக்கு மேல்
- GCE O/L - 6 பாடம் சித்தி
- சிறந்த தொடர்பாடல் திறன்
- சுய ஊக்கமுடையவர்

**நன்மைகள்**
- எல்லையற்ற வருமானம்
- வெளிநாட்டு சுற்றுலா
- பதவி உயர்வுகள்
- ஆளுமை விருத்தி
- வீடு/வாகன கடனுதவி
- இன்னும் பல கவர்ச்சிகரமான சலுகைகள்

கீழ்காணும் முகவரிக்கு 28.06.2025 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.அல்லது கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்.
077 277 5771
021 229 1060

முகாமையாளர்
புளியடிச் சந்தி, தண்ணீரூற்று
LIC முல்லைத்தீவு

### வீடு விற்பனைக்கு
யாழ் மல்லாகம் பகுதியில் பயன்தரும் மரங்களுடன் கூடிய வீடு விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு: **075 777 5693**
**076 982 7564**

### வாடகைக்கு
வெள்ளவத்தையில் தளபாடங்களுடன் சகல வசதிகளுடன் ஒரு அறை, இரண்டு அறை கொண்ட Apartment வீடுகள் (நாள், கிழமை, மாத) வாடகைக்கு. Car Parking உண்டு.
Raj Tower
145 /1, Galle Road
Colombo -06.
(CS/45162) J-1
T.P: 0112055308, 011 2055655
0777 388860

### அறை வாடகைக்கு
யாழ்ப்பாணம் கோயில் வீதியில் தொழில் புரியும் ஆண்களுக்கு அறை வாடகைக்கு உண்டு
(CS 58569) E-1
தொடர்பு: **074 375 8830**

### இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை
தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.
பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்
Ts&Cs apply
Www.inaipa.com
(CS/30178) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டு கட்சியைப்போல் ஜே.வி.பி.யும் உதிரும்

## பெரமுன எம்.பி. தெரிவிப்பு

மக்கள் எப்படி எமது மொட்டுக்கட்சியிலிருந்து கழன்று சென்றார்களோ அதேபோன்று ஜே.வி.பி.யிலிருந்தும் இப்போது மக்கள் கழன்று செல்லத் தொடங்கியுள்ளனர் என்று மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி. சாணக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சியின் தோல்விக்குக் காரணங்கள் பல உண்டு. எமது அரசு வீழ்ச்சியடைந்தபோது நாம் ரணில் விக்கிரமசிங்கவோடு இணைந்து அவரை ஜனாதிபதியாக்கி ஆட்சியைக் கொண்டு சென்றோம். கொரோனாவால் வீழ்ந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காகவே நாம் ரணிலை ஜனாதிபதியாக்கினோம். இதைத் தவிர வேறு எதற்காகவும் அல்ல. ஆனால், இதை வேறு விதமாகத் திரிவுபடுத்திய ஜே.வி.பி. எமக்கு எதிராகப் பரப்புரை செய்தது. அரச சொத்துகளை வெளிநாடுகளுக்கு விற்கப்போவதாக கூறினர். இதனால் மக்கள் எமது கட்சியில் இருந்து மெல்ல கழன்று சென்றனர். ஆனால், இப்போது அதே நிலைமை ஜே.வி.பி.க்கு ஏற்படத் தொடங்கியுள்ளது. - என்றார். (ச-75)

### 240...

போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகள் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் 25 வயதுடையவர் என்றும், அவருக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-23-26-125)

### ஈரான்...

என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஈரானின் அணு உலைகளையும், இராணுவ மையங்களையும் இலக்குவைத்து இஸ்ரேல் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தியிருந்தது. இந்தத் தாக்குதல்களில் ஈரானின் போர்த்தளபதிகள், இரண்டு அணு விஞ்ஞானிகள் உட்பட 78 பேர் உயிரிழந்தனர். இதையடுத்தே, நேற்று அதிகாலைமுதல் இஸ்ரேல் மீது ஈரான் தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

இஸ்ரேலின் டெல் அவிவ், ஜெருசலேம் நகரங்கள் மீது ஈரானின் ஏவுகணைகள் சரமாரியாகத் தாக்கும் காணொலிகள் வெளியிடப்பட்டுள்ளன. இஸ்ரேல் மீண்டும் எல்லை மீறினால், ஒரேதடவைகள் இரண்டாயிரம் ஏவுகணைகளை டெல் அவிவில் ஏவுவோம் என்று ஈரான் எச்சரித்துள்ளது. அதேபோல் தெஹ்ரோனை தீக்கிரையாகும் வரை ஓயப்போவதில்லை என்று இஸ்ரேலும் மிரட்டல் விடுத்துள்ளது. (அ-ம-இ)

### பொருளாதார...

யாழ். மட்டுவிலில் நிர்மாணிக்கப்பட்ட விசேட பொருளாதார மத்தியநிலையம் கடந்த 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் திறந்துவைக்கப்பட்டது. நிர்மாணப் பணிகளுக்கென 200 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது. எனினும், பொருளாதார மத்தியநிலையத்தின் செயற்பாடுகள் முறையாக முன்னெடுக்கப்பட வில்லை. இதையடுத்து அங்கு நேற்றுக் கள ஆய்வில் ஈடுபட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பொருளாதார மத்திய நிலையத்தின் அமைவிடம் தொடர்பில் எமக்கும் மாற்றுக் கருத்துகள் உள்ளன. எனினும், பெருமளவுசெலவில் அதுநிர்மாணிக்கப்பட்டுவிட்டது. இதுமக்களின்பணம். எனவே, அதனை எவ்வாறு நன்மைக்காக பயன்படுத்துவது என்பதே எமது நோக்கம். வியாபாரிகள் உட்பட அனைத்துத் தரப்பினதும் கருத்துகளை உள்வாங்கி அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (அ-ம-26-27-9)

### சாக்கடை...

களின் சாக்கடை அரசியல் அமைந்துள்ளது - இவ்வாறு விமர்சித்துள்ளார் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்.

உள்ளூராட்சித் தேர்தல் கூட்டணிகள் தொடர்பில், யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் சந்திரசேகர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடுதழுவிய ரீதியில் உள்ளூராட்சிசபைகள் அமைக்கப்பட்டுவருகின்றன. வடக்கிலும் இதற்குரிய நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. தெற்கில் கடைபிடித்த அணுகுமுறையை வடக்கு மற்றும் கிழக்கில் நாம் கடைப்பிடிக்கவில்லை. நாம் நடுநிலை வகித்தோம். நாம் வாக்கெடுப்பில் பங்கேற்றிருந்தால் இங்குள்ள தமிழ்க் கட்சிகளின் கனவு சிதைக்கப்படும். மனக்கோட்டை, மண்கோட்டையாக மாறியிருக்கும் என்பதைச் சொல்லி வைக்க விரும்புகின்றோம்.

இங்கு யார் ஆட்சி செய்தாலும், அந்த ஆட்சிக்கு நாம் உதவியாக இருப்போம். ஏனெனில் மக்களுக்கு சேவை செய்வதே எமது முதன்மையான நோக்கமாகும். உள்ளூராட்சிசபைகள் ஊடாக மக்களுக்குக் கிடைக்கப்பெறும் சேவைகள் சரியாகச் சென்றடையவேண்டும். அதற்காக எமது உறுப்பினர்கள் தீவிரமாகச் செயற்படுவார்கள்.

அதேபோல ஊழல், மோசடிகள் இடம்பெறும் பட்சத்தில் அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கும் எமது உறுப்பினர்கள் அயராது உழைப்பார்கள். மக்களை ஏமாற்றும் அரசியலை நாம் முன்னெடுக்க வில்லை. சாக்கடை அரசியல் செய்யவும் தயாரில்லை. அவ்வாறு செய்ய நினைத்திருந்தால் யாழ். மாநகரசபையில் இன்று வேறு நடப்பு...

வந்திருக்கக்கூடும். கடந்த காலங்கள் முழுவதும் தமிழ்த் தேசியப் பரப்பில் இருந்து ஓரங்கட்டப்பட்ட துரோகிகள் என முத்திரை குத்தப்பட்ட ராஜபக்சக்களின் காலை நக்கி பிழைக்கின்றவர்கள் எனக் கூறப்பட்ட மக்களுக்கு எதிராக அராயகங்களைக் கட்டவிழ்த்துவிட்டவர்கள் ஊடகவியலாளர்களைக் கொன்றவர்கள்எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் கூட்டுச்சேரும் நிலைமை காணப்படுகின்றது. இதனை மக்களும் இன்று புரிந்து கொண்டுள்ளனர்.

மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்காக அல்ல, தமது காவாலித் தனமான அரசியலை தக்கவைத்துக் கொள்வதற்காகவே இவர்கள் இவ்வாறு ஆசியமைக்கின்றனர். இப்படியானவர்கள்தான் தேசிய மக்கள் சக்தியை இனவாதக் கட்சியெனவும், வாக்களிக்க வேண்டாம் எனவும் பரப்புரை செய்தனர். ஆனால் அவர்கள் எத்தகையவர்கள் என்பதையும் தற்போது அம்பலமாகியுள்ளது - என்றார். (அ-ம-26)

### போதைப்...

வைத்து விசாரிப்பதற்கு மல்லாகம் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

சுன்னாகம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடம் இருந்து, 4 போதை மாத்திரைகளும் ஐஸ்போதைப்பொருளும் மீட்கப்பட்டிருந்தன. அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், மேற்படி போதைப் பொருள்களை விற்பனைசெய்த பிரதான சந்தேகநபர் மயிலங்காட்டில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் இருந்து 400 போதை மாத்திரைகளும், 2 கிராம் 800 மில்லிகிராம் ஹெரோய்னும் மீட்கப்பட்டிருந்தன. சந்தேகநபர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோதே, சந்தேகநபர்கள் மூவரையும் பொலிஸாரின் தடுப்புக்காவலில் வைத்து விசாரிப்பதற்கு நீதிமன்றம் உத்தரவு வழங்கியுள்ளது. (அ-ம-125)

### உடைமையில்...

டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் செம்மணிப் பகுதியில் வைத்து இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைதான சந்தேகநபர் 28 வயதுடையவர் என்றும், அவர் மணியந்தோட்டம் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. (அ-ம-125-26-20)

### மே மாதம்...

வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் மே மாதம் 31ஆம் திகதிவரை தீவிரமான குற்றச்செயல்களுக்காக 301 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த ஐந்து மாதங்களில் 80 கொள்ளைகளும், 4 வழிப்பறிகளும், 238 திருட்டுகளும் இடம்பெற்றுள்ளன.

இதன்படி கொள்ளைகளில் 87 சந்தேகநபர்களும், வழிப்பறியுடன் தொடர்புடைய 2 சந்தேகநபர்களும், திருட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய 212 பேரும் என மொத்தமாக 301 பேர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-125)

### பொலிஸ்...

பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய உதயனுக்குத் தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையங்களுக்கு தென்னிலங்கையைச் சேர்ந்த நபரொருவர் விடுத்துள்ள தாக்குதல் அச்சுறுத்தல் தொடர்பில் அவரைத் தொடர்புகொண்டு கேட்டபோதே இவ்வாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொலிஸ் நிலையங்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பான முழுமையான தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சந்தேக நபரை அடையாளப்படுத்தும் நடவடிக்கையும், கைதுசெய்யும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-26)

### பொலிஸ் நிலையங்கள்...

அழைப்பெடுத்து நபரொருவர் மிரட்டியுள்ள நிலையில், அவரைக்கைதுசெய்ய நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன. இந்த விடயம் தொடர்பில் வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்ததாவது:-

ஜுன் மாதம் 11ஆம் திகதி காங்கேசன்துறை பிரதான பொலிஸ் நிலையத்துக்கு தாக்குதல் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. தொலைபேசி இலக்கம் மற்றும் அழைப்பு விடுக்கப்பட்ட இட அமைவு உள்ளிட்ட விடயங்களை வைத்து, தென்னிலங்கைப் பகுதியில் இருந்து ஒருவரே இந்த அச்சுறுத்தலை விடுத்துள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-125)

### பண்டிதர்...

மாகவே இயற்கை எய்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-100)

### படகுச்...

ஓகஸ்ட் மாதம் படகுச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், இதுவரை அண்ணளவாக 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இந்தச் சேவையைப் பயன்படுத்தியுள்ளனர். எனவே, இந்தப் படகுச்சேவையை மேலும் விரிவாக்கம் செய்ய வேண்டிய தேவையுள்ளது. இதன் அடிப்படையிலேயே, இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்த நிதியுதவி இருநாடுகளுக்கும் இடையிலான இணைப்பை மேம்படுத்துவதற்கும் மக்களிடையேயான தொடர்புகளை வலுப்படுத்துவதற்கும் இந்தியாவின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்துகிறது - என்றுள்ளது. (அ-ம-இ)

### கொழும்பு...

தெரிவித்துள்ளது. இந்த சேவை ஆளிணி மற்றும் வளப் பற்றாக்குறைகள் காரணமாக, தற்போது வாரத்தின் இறுதி நாள்களில் மட்டுமே இயக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான நிலையிலேயே, இந்த மாதத்தின் இறுதிக்குள் தினசரி சேவையாக மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கெடுப்பு தவறு



கொழும்பு, ஜூன் 15

விவசாய அமைச்சினால் நடத்தப்பட்ட விலங்கு கணக்கெடுப்பின் அண்மைய தரவுகள், அறிவியல் பூர்வமானவை அல்ல என சிரேஷ்ட சுற்றுச்சூழல் நிபுணர் ஜகத் குணவர்த்தன தெரிவித்துள்ளார். குறித்த கணக்கெடுப்பு, அறிவியல் முறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படவில்லை. செங்கு ரங்குகளில் நான்கு கிளையினங்கள் உள்ளன. மேலும் லங்கூர் குரங்குகளில் ஊதா முகம் கொண்ட லங்கூர் உட்பட சில இனங்கள் உள்ளன. மர அணில்களிலும் மூன்று கிளையினங்கள் உள்ளன. ஆனால் அவற்றில் எவையும் கணக்கெடுப்பில் குறிப்பிடப்படவில்லை என்று சுற்றுச்சூழல் நிபுணர் ஜகத் குணவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)


## ஆண், பெண் வேலையாட்கள்

கீரிமலை, சேந்தன் குளம் பகுதியில் உள்ள கள்ளு ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலை ஒன்றிற்கு ஆண்/பெண் வேலையாட்கள் தேவை.

சம்பளம்-2000/= , மதிய உணவு வழங்கப்படும். லேபில் ஒட்டுதல், பெட்டி ஒட்டுதல், தூக்குதல், துடைத்தல், மூடிக்கு பெயின்ற் அடித்தல் போன்ற வேலைகள்

நேரம்- மு.ப 08.30- பி.ப 05.30

தொடர்பு: 077 711 1999

## வேலையாட்கள் தேவை

தென் மாகாணத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடையொன்றில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய ஆண் வேலையாட்கள் தேவை.

- பில் கணக்கு எழுதக்கூடியவர்கள்
- காசாளர்
- சமைக்கக்கூடியவர்கள் (மதிய உணவு)
- சம்பளம் :- 60,000/-

(CS/58588) J-1

தொடர்பு:- 077 480 3379

## பணிப்பெண் தேவை

சாவகச்சேரி மூன்று மடத்தடியில் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.

(CS/58590) D

தொடர்பு:- 077 396 5382

## காணி விற்பனைக்கு

நாவற்குழியில் 55 பரப்பும், 7 1/2 பரப்பும், அராலியில் 450 பரப்பு

காரைநகர் வீதியில் இருந்து 1Km தூரத்தில் கடற்கரை முன்பாக தொழிற்சாலை அமைக்க கூடிய உகந்த இடம். வாடகைக்கு கடையும், மேல்மாடி வீடும் யாழ் நகரில் உண்டு.

தொடர்புகளுக்கு:

077 665 9735, 076 071 2676
077 662 6117

## வேலைவாய்ப்பு

எரிபொருள் நிரப்புனர் ஆர்வமுள்ளோர்

அலுவலக நேரத்தில் (திங்கள் - வெள்ளி) 9 a.m to 5 p.m

நேரில் வருகை தரவும்,
73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(CR/45170) J-1

## பணிப்பெண் தேவை

கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள வீடொன்றில் தங்கிநின்று பணிபுரிவதற்கு பணிப்பெண் தேவை.

(CS/58584) J-1

077 979 6593, 075 639 8165

## அவசர தேவை

சிறுநீரகம் பாதிப்படைந்த நபர் ஒருவருக்கு O+ வகையான சிறுநீரகம் தேவைப்படுகின்றது.

வயதெல்லை - 30 - 50

தொடர்பு:- 076 476 7400

## காணி விற்பனைக்கு

தாவடி வடக்கு தாவடியில் வீடு கட்டுவதற்கு உகந்த 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(1 1/2 பரப்பாகவும் வழங்கப்படும்)

தொடர்புகளுக்கு:

076 255 0807

## வேலையாள் தேவை

யாழ் நகர் மத்தியில் நீண்ட காலமாக இயங்கும் உணவகம் ஒன்றிற்கு Bill போடும் வேலைக்கு ஆள் தேவைப்படுகிறது.

(CS 58574) E-1

தொடர்பு: 077 119 0011


# மரண அறிவித்தல்

## இராசையா இராசநாயகம்



மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா இராசநாயகம் நேற்று (14.06.2025) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - இராசமணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராஜா இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற தையல்நாயகி அவர்களின் பாசமிகு கணவரும் கௌரிபாலன் (லண்டன்), உமாசங்கர் (செல்வி நகைஅகம், கே.கே.எஸ் வீதி குளப்பிட்டி சந்தி), கலைச்செல்வி (ஜேர்மனி), ஞானச்செல்வி, ஆகியோரின் அன்புத் தந்தையும் கஸ்தூரி (லண்டன்), கலைவாணி, ஜெயக்குமார் (ஜேர்மனி) பாஸ்கரன் (அஞ்சல் சேவை உத்தியோகத்தர் திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் சங்கவி (லண்டன்), ஆதவன் (லண்டன்), நவிநயன், அபிநயா, அக்சரன், விதுசா (ஜேர்மனி), லுசாந் (ஜேர்மனி), ஆரணியா (ஜேர்மனி), சதுர்சிகா ஆகியோரின் அன்பு பேரனும் காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் இராஜேஸ்வரன், இரத்தினேஸ்வரன், இரத்தினகுமாரன் ஆகியோரின் அன்பு சகோதரரும் இந்திராதேவி, காலஞ்சென்ற உமாதேவி மற்றும் இந்திரலீலா, சந்திராதேவி, காலஞ்சென்றவர்களான சிவகாமசுந்தரி, சுந்தரவதனா ஈஸ்வரி மற்றும் சிவஞானசுந்தரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 22.03.1946 | மறைவு 14.06.2025

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு
கொக்குவில்

தகவல் :
குடும்பத்தினர்
077 749 1895

(CS 58583) E-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8ம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



தோற்றம் : 25.08.1950 மறைவு : 08.06.2025

கடந்த 08.06.2025 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி

**அமரர் ஜெயரட்ணம் நவமணி**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு உடன் ஓடி வந்து தருணத்தில் வேண்டிய உதவி செய்த உறவினர்களுக்கும், அன்னாரின் மரணச்செய்தி கேட்டு பல வழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும், தொலைபேசி மற்றும் சமூக ஊடகங்கள் ஊடாக ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும், உற்றார், அயலவர்கள், உறவினர், நண்பர்கள், யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியர்கள், யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி ஆசிரியர்கள், பதிவாளர் நாயக திணைக்கள வடக்கு வலய உத்தியோகத்தர்கள், சாவகச்சேரி நீதிமன்ற அலுவலர்களுக்கும், யாழ் பல்கலைக்கழக நண்பர்களுக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், பத்திரிகை, பதாதைகள் வாயிலாக கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், இறுதிக்கிரியை நிகழ்வில் உடன் இருந்து உதவி செய்தவர்களுக்கும், கலந்து கொண்டவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

லோட்டன் வீதி,
மானிப்பாய்.

பிரிவால் துயரும்
குடும்பத்தினர்.

# சிவனொளிபாதமலை பாதை மூடல்

கொழும்பு, ஜூன் 15

அவசர பராமரிப்புப் பணிகள் காரணமாக நோர்டன் பிரிட்ஜில் இருந்து கினிகத்தேன தியகல வழியாக சிவனொளி பாதமலை வரையிலான பாதை 10 நாள்களுக்கு மூடப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கினிகத்தேன தியகல வழியாக நோர்டன் பிரிட்ஜ், மஸ்கெலியா ஸ்ரீபாத வீதியில் உள்ள பாலம் இடிந்து விழும் அபாயத்தில் உள்ள நிலையில் புதிய பாலம் கட்டப்பட்டு வதால் குறித்த வீதி மூடப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)


## விற்பனைக்கு

Photo copy இயந்திரங்கள் விற்பனைக்குண்டு
(Model - tosiba e studio 182,
tosiba e studio 205,
tosiba e studio 455)

தொடர்பு :- 077 206 8151

## காணி விற்பனைக்குண்டு

தெல்லிப்பளையில் 12
பரப்புக்காணி விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு: 077 023 9769

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

தொடர்புகளுக்கு:
அங்கர் பாதுகாப்பு சேவை
114 செம்மணி றோட்,
நல்லூர். யாழ்ப்பாணம்.

077 539 6350

## வேலையாட்கள் தேவை

பிரபல உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை

- பார்சல் கட்டுபவர் - நாள் ஒன்றிற்கு 2500/= (ஆண்)
- துப்பரவு பணியாளர் - நாள் ஒன்றிற்கு 2000/= (ஆண்)
- உணவு விநியோகிப்பவர் - நாள் ஒன்றிற்கு 2000/= (ஆண்)
- சிட்டை எழுதுனர் - இருபாலரும் - நாள் ஒன்றிற்கு 2200/=

தொடர்பு: 077 907 9888

## வேலைக்கு ஆட்கள் தேவை

வலி வடக்கு பகுதியில் அமைந்துள்ள ஹாட்வெயார் விற்பனை நிலையத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர். விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

(சாரதி அனுமதிப்பத்திரம் உடையவர்கள் விரும்பத்தக்கது.)

தொடர்பு: 077 723 0720

## தவறவிடப்பட்டுள்ளது

கிளிநொச்சி - யாழ்ப்பாண புகையிரத பயணத்தின் போது சுரேஜினி என்ற பெயருடைய தேசிய அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் அடங்கிய கைப்பை ஒன்று தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் எம்மோடு தொடர்பு கொள்ளவும் :

075 330 5500 / 076 286 8139

## வேலையாள் தேவை

யாழ் நகரில் இயங்கி வரும் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணனி பயிற்சி உடைய அலுவலகப் பெண் பணியாளர் தேவை.

சிங்கள மொழி தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 700 6803

## குத்தகைக்கு தேவை

அரிசி ஆலை குத்தகைக்குத் தேவை.

(ஆலை நடாத்தக்கூடிய இடமாக இருந்தாலும் விரும்பத்தக்கது.)

வடமாகாணம் விரும்பத்தக்கது.

(யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா)

தொடர்புக்கு :- 076 174 6666

## வேலைவாய்ப்பு

யாழ்நகரில் இயங்கும் பிரபல்யமான உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலைக்கு பணியாளர்கள் தேவை.

- உணவு பரிமாறுபவர் (Waiter)
  Basic Salary : 45000/=
- சமையல் உதவியாளர் (Kitchen helper)
  Basic salary : 45000/=

மேலும் திறமைக்கு ஏற்ப Salary அதிகரிக்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிபரத்தை பின்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

076 467 4313

(CS 3390) (B)

## வேலைவாய்ப்பு

ASR Valuation & Real Estate Consultancy Pvt Ltd

எமது நிறுவனத்தில் பின்வரும் பணியிடங்கள் வெற்றிடமாக உள்ளன:

- Administrative Assistant
- Real Estate Agent

தகுதியும் ஆர்வமும் உள்ளவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கலாம். உங்கள் சுயவிவரக் கோவையை இந்த இலக்கத்துக்குரிய Whatsapp இற்கு அனுப்பவும்.

தொடர்புக்கு : 077 743 8240 / 076 772 5781

Email : asrnorthern25@gmail.com

**விளம்பர அறிவிப்பு**

உங்கள் காணி / வீடுகளை விற்பனை செய்ய விரும்புகிறீர்களா? அப்படியானால், ASR Valuation & Real Estate Consultancy (Pvt) Ltd நிறுவனத்தினை நாடுங்கள்!

இப்போது எமது (asrvaluers.lk) இணையதளத்தின் ஊடாக இலவசமாக உங்கள் வீடுகளையும், காணிகளையும் விற்பனைக்கு பதிவு செய்யலாம்.

மேலும் விபரங்களுக்கு, எங்களை தொடர்பு கொள்ளவும்: 076 772 5781

## Spoken English & Grammar Classes

பல வருட அனுபவ ஆசிரியர்
K.Ganesh B.A Pera
Grade 7 to GCE OL, AL, பட்டதாரிகள்
International School Students
அன்னசத்திர வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு: 077 766 8725

## வீடு வாடகைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 300 M தூரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய வீடு குறிகியகாலத்திற்கு (நாளாந்த அடிப்படையில்) வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 443 2989

## வீட்டு பணிப்பெண் தேவை

யாழ் நகரில் ஐந்து பேர் கொண்ட குடும்பமொன்றிற்கு தங்கி நின்று வேலை செய்ய பணிப்பெண் தேவை
சம்பளம் : 60 000 /=
வயதெல்லை : 35 - 55
உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்

தொடர்புகளுக்கு:
075 498 5400
077 937 0000

## பெண் வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலைகளை செய்வதற்கு பெண் வேலையாட்கள் தேவை
தங்குமிடம், உணவு, போக்குவரத்து வசதிகளும் உண்டு
35 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது
சம்பளம் : 100,000 /=

077 7743 185

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகரை அண்மித்த பகுதியில் இருவர் வசிப்பதற்கு வீடு வாடகைக்கு தேவை

தொடர்பு: 076 908 5223
077 844 9353


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி


Registered as a Newspaper

சென்றே எறிய ஒருகால்; சிறுவரை
நின்றே எறிப பறையினை – நன்றேகாண்
முக்காலைக் கொட்டினுள் மூடித்தீக் கொண்டுஎழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து.

– நாலடியார்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 ஆனி 1 ஞாயிற்றுக்கிழமை (15.06.2025) சிகரம் :149

நிலாந்தன்



# தமிழ்த் தேசியப் பேரவை:

## பத்தாண்டு காலத் தவறுகளில் இருந்து கற்றுக்கொள்வது?

உள்ளூராட்சிசபைககளில் புதிய ஆட்சியை உருவாக்கும் விடயத்தில் தமிழ்க்கட்சிகளுக்கு இடையே நிகழும் போட்டிகளும் உள்ளூராட்சி சபைகளை ஒரு கட்சி கைப்பற்றிய பின் கட்சிகளின் விசுவாசிகள் சமூக வலைத்தளங்களில் மோதிக்கொள்ளும் காட்சிகளும் ஒரு விடயத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன. நடப்பது கட்சிகளுக்கு இடையிலான போட்டிதான். அதாவது தேர்தல்மைய அரசியல்தான். இதில் தேசத்தைத் திரட்டும் அரசியல் அல்லது தேசத்தைக் கட்டியெழுப்பும் அரசியல் எங்கே இருக்கிறது?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவை ஒப்பீட்டளவில் அதைச் செய்யலாம். அதற்கு மூன்று காரணங்களைக் கூறலாம். முதலாவது காரணம், அது ஒப்பீட்டளவில் இறந்தகாலத்தில் இருந்து கற்றுக்கொண்ட பாடங்களின் விளைவு என்று தோன்றுவது. இரண்டாவதாக, அது ஒப்பீட்டளவில் தமிழ்த் தேசிய அரசியலில் இப்போதைக்கு ஏதோ ஒரு வகையான பண்புருமாற்றத்தைப் பிரதிபலிக்கின்றது. மூன்றாவதாக, அது ஒப்பீட்டளவில் உள்ளவற்றில் பெரிய கூட்டாகக் காணப்படுகின்றது.

பைபிளில் ஒரு வசனம் உண்டு. "பூமியிலே சூரியனுக்கு கீழே நூதனமானது எதுவுமே இல்லை". இப்பொழுது உருவாக்கப்பட்டுவரும் உள்ளூராட்சிசபைகளின் புதிய ஆட்சிக்கும் அது பொருந்தும். தமிழ்த் தேசியப் பேரவைக்கும் அது பொருந்தும். தமிழ்த் தேசியப் பேரவைக்குள் இருக்கும் கட்சிகளுக்குள் ரெலோ மற்றும் சந்திரகுமாரின் கட்சிகளைத்தவிர ஏனைய கட்சிகள் தமிழ் மக்கள் பேரவைக்குள் இருந்தவைதான். அதாவது கிட்டத்தட்ட ஆறு ,ஏழு ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்கள் பேரவைக்குள் ஒன்றாக இருந்தவை. அப்பொழுது தயாரித்த யாப்பு முன்மொழிவைத்தான் இப்பொழுது இறுதித் தீர்வுக்கான முன்மொழிவாக அவர்கள் வைக்கிறார்கள். அப்பொழுது இரண்டாவது எழுக தமிழில் சிறீதரனும் தனது ஆதரவாளர்களுடன் கலந்து கொண்டார்.

தமிழ்மக்கள் பேரவைக்குள் காணப்பட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள், விக்னேஸ்வரனின் கட்சி ஆகிய இரண்டும் இப்போதுள்ள கூட்டுக்குள் இல்லை. புதிதாக சந்திரகுமாரும் ரெலோவினரும் தான் இருக்கின்றனர். அப்படித்தான் கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்ப் பொது வேட்பாளரை முன்நிறுத்திய தரப்புகளில் பெரும்பாலானவை இப்பொழுது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு இணைந்து புதிய கூட்டுக்குள் காணப்படுகின்றன. அதாவது கிட்டத்தட்ட பத்து மாதங்களுக்கு முன்பு தமிழ்ப் பொது வேட்பாளருக்காக ஒன்றுதிரண்ட அதே தரப்புகள் இப்பொழுது சமத்துவக் கட்சி, சைக்கிள் கூட்டு என்பவற்றோடு இணைந்து ஒரு புதிய கூட்டாக மேலெழுந்திருக்கின்றன.

பத்து மாதங்களுக்கு முன்பு கஜேந்திரகுமார் பொது வேட்பாளரை எதிர்த்தவர். அந்த விடயத்தில் அவரும் சுமந்திரனும் ஒரே கோட்டில் நின்றார்கள். இருவேறு நிலைப்பாடுகளோடு அவர்கள் பொது வேட்பாளரை எதிர்த்தார்கள். தேர்தலுக்குப் பின் கஜேந்திரகுமார் பொதுவேட்பாளருக்குக் கிடைத்த வாக்குகளைத் தேசியப் பண்புமிக்கவை என்று சொன்னார். இப்பொழுது அதே கட்சிகளோடு கூட்டு. ஆனால் மூன்று வித்தியாசங்கள். தமிழ்த் தேசியப் பொதுக்கூட்டமைப்பு இல்லை. விக்னேஸ்வரனின் கட்சி இல்லை. சந்திரகுமாரின் கட்சி உள்ளே வந்திருக்கிறது. அப்பொழுது சிறீதரன் பொது வேட்பாளரோடு துணிந்து நின்றார்.

எனவே இப்பொழுது தொகுத்துப் பார்த்தால் என்ன தோன்றுகிறது? தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது தமிழ் மக்கள் பேரவையைப் பாதுகாக்கவேண்டும் என்ற முடிவெடுத்து கிட்டத்தட்ட ஏழு அல்லது எட்டு ஆண்டுகளுக்கு முன் பொறுமையாகவும் தீர்க்கதரிசனமாகவும் செயற்பட்டு இருந்திருந்தால் இன்றைக்கு தமிழ்த் தேசிய அரசியலின் நிலைமை எங்கேயோ போயிருக்கும். அப்படித்தான் ஆகக்குறைந்தது கடந்த ஆண்டு பொது வேட்பாளரின் விடயத்திலாவது முன்னணி தீர்க்கதரிசனமாக முடிவெடுத்து இருந்திருந்தால் இன்றைக்கு முன்னணிதான் சிலசமயம் தமிழ்த் தேசிய அரசியலின் தலைமைச் சக்தியாக மேலெழுந்திருந்திருக்கும். ஆனால் கடந்த சுமார் 10ஆண்டுகளில் அவர்கள் தீர்க்கதரிசனமற்ற முடிவுகளை எடுத்தார்கள். பகைவர்களைச் சம்பாதித்தார்கள். குறிப்பாக தமிழ்மக்கள் பேரவை, தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு ஆகிய நூதனமான கட்டமைப்புகளை பலப்படுத்தத் தவறினார்கள்.

தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு ஆகியவை இந்தப் பிராந்தியத்திலேயே நூதனமான அரசியல் தோற்றப்பாடுகள். கட்சிகளும் மக்கள் அமைப்புகளும் இணைந்து உருவாக்கிய ஒரு கலவை. அப்படி ஒரு கலவைதான் இப்பொழுது நாட்டை ஆளும் தேசிய மக்கள் சக்தியும். தமிழ்மக்கள் பேரவை படிப்படியாக பலமிழந்துபோன ஒரு காலகட்டத்தில், 2019இல் தெற்கில் தேசிய மக்கள் சக்தி உருவாகியது. இன்றைக்கு அது ஆளுங்கட்சியாக எழுச்சிபெற்றுவிட்டது. அதற்கு முன் தோன்றிய தமிழ் மக்கள் பேரவையும் இப்பொழுது இல்லை. அதற்குப்பின் தோன்றிய தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பும் இப்பொழுது இல்லை. 10ஆண்டுகளில் தமிழ்மக்கள் இரண்டு தடவைகள் மேலெழ முயன்றார்கள் என்று பொருள். எனவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடந்த ஒரு தசாப்த காலத்தில் விட்ட தவறுகளில் இருந்து கற்றுக்கொண்டவற்றின் அடிப்படையில் புதிய கூட்டைப் பாதுகாக்குமாக இருந்தால் தமிழ்த் தேசிய அரசியலில் அடுத்த கட்டத்திற்கு தலைமை தாங்கும் சக்தியாக அவர்கள் தங்களை வளர்த்துக்கொள்ளமுடியும்.

கடந்த ஆண்டின் தொடக்கத்தில் தனது சொந்தக் கட்சிக்காரர்களாலே நிராகரிக்கப்பட்டவரும், அதே ஆண்டின் இறுதியில் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவருமாகிய சுமந்திரன் இப்பொழுது தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பெரிய கட்சி ஒன்றின் தீர்மானிக்கும் சக்திபோலச் செயற்படுகிறார். கட்சிக்குக் கிடைத்த வெற்றிக்கூடாக அவர் தன்னை ஸ்தாபித்துக்கொள்ளப் பார்க்கிறார். தமிழ் மக்கள் மத்தியில் வடக்கு கிழக்கு தழுவிய ஒரே கட்சியாக அது காணப்படுகின்றது. அதனால்தான் அது ஏனைய கட்சிகளை விடவும் பலமாக மேலெழ முடிந்தது. ஆனால் முன்னணி யாழ்ப்பாணத்துக்கு வெளியில் போதிய அளவுக்கு வேலை செய்யவில்லை என்பதுதான் உண்மை. கடந்த 15 ஆண்டுகளிலும் அவர்கள் ஒரு கட்சியாகவும் தங்களை வளர்த்துக்கொள்ளத் தவறிவிட்டார்கள்; தங்கள் கொள்கைகளை மக்கள் மயப்படுத்தி தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டவும் தவறிவிட்டார்கள். அதன் விளைவாக தமிழரசுக் கட்சியின் முதன்மையைக் கேள்விக்கு உள்ளாக்க அவர்களால் முடியவில்லை. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்மக்கள் வழங்கிய ஆணை என்பது மிகத்தெளிவானது. ஒன்றுபட்டால் மட்டும்தான் என்.பி.பி.யை எதிர்கொள்ளலாம் என்பதே அந்த ஆணை. வவுனியா உள்ளூராட்சிசபையில் அதுதான் நிலைமை. ஒன்றுபடவில்லையென்றால் என்.பி.பி. அடுத்துவரவுள்ள மாகாண சபைத் தேர்தலுக்குள் மேலும் பலமாக கால்களை ஊன்றப் பார்க்கும். ஆனால் கடந்த சில வாரங்களாக உள்ளூராட்சி சபைகளில் புதிய ஆட்சியை உருவாக்கும் விடயத்திலும், சபைகளைக் கைப்பற்றிய பின்னரும் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளுக்கு இடையே நடக்கும் உரையாடல்கள், வாதப் பிரதிவாதங்கள், மோதல்கள், குறிப்பாக அவர்களுடைய விசுவாசிகள் சமூக வலைத்தளங்களில் முன்னெடுக்கும் வெறுப்புப் பரப்புரைகள் போன்றவற்றைத் தொகுத்துப்பார்த்தால் தெரிவது என்னவென்றால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்மக்கள் வழங்கிய ஆணையை மேற்படி கட்சிகள் சரியாகக் கிரகித்துக்கொள்ளவில்லை என்பதுதான். இந்த ஆணை புதியது அல்ல. கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் ஏறக்குறைய தமிழ்மக்கள் வழங்கிய ஆணை அத்தகையதுதான். தேசமாகத் திரளவில்லை என்றால் என்.பி.பி.யின் வழிகளை இலகுவாக்குவீர்கள் என்பதே அந்த ஆணை.

எனவே பொது எதிரிக்கு எதிராகத் தேசமாகத் திரள்வது எப்படி என்பதுதான் இங்குள்ள சவால். சுமந்திரன் அதற்குத் தயாரில்லை என்பதற்காக, சி.வி.கே. அந்த விடயத்தில் தளம்புகிறார் என்பதற்காக, தமிழரசுக் கட்சிக்குள் உள்ள எல்லாரையுமே அவ்வாறு தேசத் திரட்சிக்கு எதிரானவர்கள் என்று முத்திரை குத்த முடியாது; குத்தவுங்கூடாது. ஏனென்றால் தமிழரசுக் கட்சிக்குள் இப்பொழுது தெளிவாக இரண்டு அணிகள் உண்டு. அதில் சிறீதரன் அணியானது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிடம் பரிவோடு காணப்படுகிறது. எழுக தமிழ்கள், பொது வேட்பாளர் ஆகிய இரண்டு தீர்மானகரமான தருணங்களிலும் சிறீதரன் மிகத்தெளிவான நிலைப்பாட்டை எடுத்தார். சந்திரகுமாரை புதிய கூட்டுக்குள் உள்ளீர்த்ததன்மூலம் சிறீதரனுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலான உறவில் சில நெருடல்கள் ஏற்படலாம். ஆனாலும் சுமந்திரனுக்கு எதிரான அணிச்சேர்க்கை என்று பார்க்கும்பொழுது சிறீதரன் அணி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குக் கிட்டவாகத்தான் நிற்கும். அதற்காக அரசியலை சுமந்திரனுக்கு எதிராக குவிமையப்படுத்தத் தேவையில்லை. மாறாக, தேசத்தைத் திரட்டுவது என்ற அடிப்படையில் கிராமங்களில் இருந்து தமிழ்த் தேசியப் பேரவையை எப்படிக் கட்டியெழுப்புவது என்று சிந்திக்கலாம்.

02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா மக்கள் சேவகர்களுக்கு...!

*வணக்கம்.*

விடியக்காலையிலையே மணியத்தின்ரை குரல் கேட்டுது. எட்டிப் பாத்தன். மணியம்தான் மோட்டச் சைக்கிளில வந்திருந்தான். 'அன்னமுத்து...அன்னமுத்து...' மணியத்தின்ரை அந்தக் கூப்பிடுதல் பத்துவீட்டுக்குக் கேட்டிருக்கும் எண்டு நினைக்கிறன். விடியலிலை ஏன் இப்பிடிக் கத்துறான் எண்டு கேக்க வேணுமெண்டு நினைச்சன். ஆனால் வாயை அடக்கிக்கொண்டன்.

'மணியம் என்ன பிரச்சினை விடியவே இந்தப் பக்கம்?' எண்டு கேட்டன்.
'அன்னமுத்து இந்த அநியாயத்தைக் கேளன்' எண்டு மணியம் வெடிக்கத் துவங்கினான்.

'சாதுவா இருமல் இருக்கு எண்டிட்டு டிஸ்பென்சரிக்குப் போனன். இருமல் இப்ப எத்தினை நாளா இருக்கிது? எண்டு டாக்குத்தர் கேட்டா. இப்ப இரண்டு கிழமை இருக்குது எண்டு சொன்னதுதான் தாமதம் உடனை பண்ணைக்குப் போய் சளிச் சோதினை செய்யவேணும் எண்டு சொல்லித் துண்டை எழுதித்தந்தா. இரண்டு நாளிலை ரிப்போர்ட்டோடை வராட்டி 'பி.எச்.ஐ.' வீட்டை வருவார் எண்டு என்னை வெருட்டினா. அதுக்குப் பயந்து பண்ணைக்குப் போனன்.




பெரிய பஸ் ஸ்ராண்டிலை இறங்கிப் பண்ணைக்கு நடந்துதான் போனனான். பொன்னம்மா மில் பக்கமாப் போனால் ஒருபக்கம் கருவாட்டு நாத்தம். ஒண்டும் செய்யேலாமை மூக்கைப் பொத்துக் கொண்டு கிடு கிடு எண்டு நடந்தன். பெரிய தபால் கந்தோரைத் தாண்டி வளைவிலை வலப்பக்கமாத் திரும்பினால் என்னாலை நடக்கேலாமல் போச்சு. குண்டும் குழியுமா றோட்டு. அதிலை மழை வெள்ளம் வேறை. கொஞ்சத்தூரம் நடந்தன். களைக்கத் துவங்கிவிட்டுது. நிண்டன். இதோடை பாக்கேக்கை எங்கடை ஊர் ஒழுங்கையள் திறம் எண்ட நினைவுதான் எனக்கு வந்திது.

அதாலை போய்த்தான் மீன்கடை, இறைச்சிக்கடை, மரக்கறிச் சந்தை, றெலிகொம், லேபர் டிப்பாட்மென்ட், குடிநீர் வடிகால் திணைக்களம், சிறுவர் நன்னடத்தை, பொலிஸ், ஆமி காம்ப், வட மாகாணச் சுகாதாரப் பிரிவு, மாவட்ட சுகாதாரப் பணிமனை எனக் கன அரசாங்க அலுவலகங்களுக்குப் போகவேணும். தினமும் கனக்கச் சனம் உபயோகிக்கிற றோட்டு அது. முழு அரசாங்க அதிகாரியளும் அதாலைதான் போய்வருகினம். அவையள் ஒராளின்ரை கண்ணுக்கும் அந்த றோட்டு எத்துப்படேல்லையோ? என்ன மனுசரப்பா? மக்களைப் பற்றி ஒருதருக்கும் அக்கறை இல்லை. இப்ப அவையளின்ரை கண்ணுக்கு மக்கள் ஆடு மாடுகளுக்குச் சமமாப் போயிட்டினம் எண்டதுதான் என்ரை கருத்து.

நான் போன வேலையையும் விட்டிட்டு அதிலை புறுபுறுத்துக் கொண்டு நிண்டன். அதிலை ஒரு ஓட்டோக்காரன் வலுவேகமா வந்து என்னைத் தாண்டிப்போனான். போகேக்கை அவன் சும்மா போகேல்லை. அந்தக் குழிக்குள்ளை நிண்ட சேத்துத் தண்ணியாலை என்னைக் குளிப்பாட்டிக் கொண்டு போனவன். என்ரை வேட்டியின்ரை ஒரு பக்கம் சரி. அந்த மீன்கடைப் பக்கம் இருந்து வந்த தண்ணியும் அதிலை நிண்டு சகிக்கமுடியாத மணம். மூக்கைப் பொத்திக்கொண்டு எட்டி நடந்து ஒரு கரைப்பக்கம் போய் நிண்டு காலிலையும் கையிலையும் பட்ட சேத்தைத் துடைச்சுக்கொண்டு நிண்டன். அங்காலை நிண்டு இதையெல்லாம் கவனிச்சுக் கொண்டு நிண்ட ஒரு ஓட்டோத் தம்பி வந்து என்ன, ஏது எண்டு விசாரிச்சான். அண்ணை இண்டைக்குத்தான் இஞ்சாலிப் பக்கம் வாறியள்போலை கிடக்கு. உது இப்ப வருசக் கணக்கா உப்பிடித்தான் கிடக்கு. எங்கடை யாழ்ப்பாண முனிசிப்பலும் உதைப் பாக்கிறேல்லை. தெருக்களைப் போட்டுப் பராமரிக்கிற திணைக்களமும் உதைப் பாக்கிறேல்லை. அப்பிடி ஆரேன் போய் முறைப்பாடு குடுத்தாலும் உது எங்கடை வேலை இல்லை அவையளிட்டைப் போய்ச் சொல்லுங்கோ எண்டு வேறை திணைக்களத்தைச் சொல்லுறது. அங்கை போய்ச் சொன்னால் அது அவையள்தான் செய்யவேணும் உங்களை வீணா அலைக்கழிக்கினம். உங்களுக்கு அரசில்வாதியளைத் தெரியாதோ. அவையளிட்டைப் போய்ச் சொன்னால் அதைப் பாப்பினம். அவைதான் கொஞ்சம் காரமா வெருட்டி அவையளுக்கு விளங்கப்படுத்துவினம். அதோடை அவைக்குத்தான் அவையளுக்கு வகுப்பெடுக்கத் தெரியும், பந்தை அங்காலை எறியிறதுதான் அவையின்ரை பழக்கம். உதுதான் காலகாலமா இஞ்சை நடக்கிது எண்டு அந்த ஓட்டோப் பெடி பெரிய ஒப்பாரி வைச்சவன். பிறகு சேத்திலை நனைஞ்சுபோய் நிக்கிற என்னைப் பாக்க அவனுக்கு பாவமாத் தெரிஞ்சதுபோலை. பெரியவர் எங்கை போகவேணும் எண்டு கேட்டான்? பண்ணைக்குச் சளிச் சோதினைக்குப்போறன் எண்டு சொன்னன். வந்தேறுங்கோ கொண்டு போய் விடுகிறன் எண்டு தன்ரை ஓட்டோவைக் காட்டினான். ஏறி இருந்தன். அவன் கொண்டுபோய் அங்கை என்னை விட்டான்.

எனக்குத் திரும்பத் திரும்ப அதே யோசனைதான். எந்த அரசாங்கம் வந்தாலும் உவங்களைத் திருத்தேலாது. பல காலம் குட்டைக்குள்ளை ஊறின மட்டையள் உவங்கள். பெரும்பாலான ஆக்களின்ரை வேலை ஒழுங்கில்லை. அவை ஒழுங்கா இருந்தால் பண்ணைக்குப் போற ஒழுங்கை சரியா இருக்கும் எண்டதுதான் என்ரை கருத்து.

உங்கள்மேல் பிரியமுள்ள
அப்பாவி அன்னமுத்து

## தமிழ்த் தேசியப் பேரவை:

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



ஏறக்குறைய ஏழு எட்டு ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்கள் பேரவைக்குள் இருந்த பொழுது இதே கட்சிகள்தான் எழுக தமிழ்களைச் செய்தன. மக்கள் எழுச்சிகள்தான் அரசியலில் புதிய இரத்தச் சுற்றோட்டங்களை ஏற்படுத்தும். அவ்வாறான மக்கள் எழுச்சிகளுக்குரிய உணர்ச்சிகரமான தொடக்கப் புள்ளிகள் ஏற்கனவே உள்ளன. உதாரணமாக தையிட்டி. அடுத்தது, கிழக்கில் மேய்ச்சல் தரை. மன்னாரில் கனியவள மண் அகழ்வு. இவைதவிர அண்மைக் காலமாக கிண்டப்பட்டு வரும் செம்மணிப் புதைகுழி.

செம்மணிப் புதைகுழி ஓர் உணர்ச்சிகரமான விடயம். அது தமிழ் மக்களை வீதிக்குக் கொண்டுவரும். அங்கே இதுவரையிலுமான 19 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. அது ஒரு சுடலை. அரியாலை மக்களுக்கான சித்துப்பாத்தி மயானம். அங்கே யாரையும் புதைப்பதில்லை. அங்கு கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் ஆடைகளோடு இல்லை. பொதுவாக பூத உடல்களை நிர்வாணமாக எரிப்பதும் இல்லை; புதைப்பதும் இல்லை. அந்தப் பகுதியில் சுமார் 600க்கும் குறையாதவர்கள் கொன்று புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கத் தேவையான தகவல்களை சம்பந்தப்பட்ட படைத்தரப்பினரே நீதிமன்றங்களில் வாக்குமூலங்களாக வழங்கியிருக்கிறார்கள்.

இப்பொழுது அந்தப்புதைகுழி கிண்டப்படுகிறது. அங்கே புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றவர்களின் உறவினர்கள் அந்தப்புதைகுழிக்குள் தங்களுடைய உறவுகளின் ஏதாவது ஒரு தடயம் மிச்சம் இருக்குமா என்ற தவிப்போடு அங்கே வந்திருக்கவேண்டும். உக்காத ஒரு சேலைத் துண்டு அல்லது ஒரு செருப்பு அல்லது பிளாஸ்டிக் காப்பு போன்ற ஏதாவது ஒரு தடயம் அங்கே கிடைக்குமா என்ற பதற்றங் கலந்த தவிப்போடு அப்பகுதிக்கு இதுவரை எத்தனை பேர் வந்திருக்கிறார்கள்?

இந்த இடத்தில் தென்னிலங்கையில் 2012இல் மாத்தளைப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட பொழுது, அப்பொழுது உயிரோடு இருந்த மனித உரிமைச் செயற்பாட்டாளர் சுனிலா அபயசேகர தெரிவித்த ஒரு கருத்தை இங்கு சுட்டிக்காட்டலாம். மாத்தளை ஆஸ்பத்திரி வளாகத்தில் 150க்கும் குறையாத எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதுதொடர்பாக சுனிலா, "சண்டே டைம்ஸ்" பத்திரிக்கைக்கு வழங்கிய நேர்காணலில் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டியிருந்தார். "இதுவே லத்தீன் அமெரிக்க நாடாக இருந்தால் அங்கே இப்படி ஒரு புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டால், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அந்த இடத்தை நோக்கிக் குவிந்திருப்பார்கள். ஆனால் இலங்கையிலோ நிலைமை அவ்வாறில்லை. யாரும் அந்த இடத்திற்கு வரவில்லை" என்ற பொருள்பட சுனிலா கவலையோடு கருத்துத் தெரிவித்திருந்தார். மாத்தளையில் மட்டுமல்ல செம்மணியிலும் நிலைமை அதுதானா?

இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாதத் தொடக்கத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் செம்மணிப் புதைகுழியைப் பார்வையிட வருகிறார். செம்மணிப் புதைகுழி போல ஏற்கனவே மன்னார் புதைகுழி, கொக்குத்தொடுவாய் புதைகுழி என்று பல புதைகுழிகள் உள்ளன. எனவே புதைகுழிகள் தொடர்பான சுதந்திரமான விசாரணையைக் கேட்டு தமிழ் மக்களை வீதியில் இறங்கலாம். கடந்த ஐந்தாம் திகதி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அதுதொடர்பான ஒரு கவனவீர்ப்புப் போராட்டத்தை செம்மணியில் ஒழுங்குபடுத்தியிருந்தார்கள்.

உள்ளூராட்சிசபைகளில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான போட்டா போட்டிகளை ஒரு பக்கம் வைத்துவிட்டு புதைகுழிகளின் மீது கட்சிகள் கவனத்தைத் திருப்புமா? குறிப்பாக தமிழ்த் தேசியப் பேரவைக்குள் உள்ள கட்சிகளுக்கு ஏற்கனவே "எழுக தமிழ்" செய்த அனுபவம் உண்டு. மக்களை எழுச்சிபெறச் செய்வதென்றால் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் எதையாவது காட்டவேண்டும். அல்லது உணர்ச்சிக் கொதிப்பான ஏதாவது ஒன்று நடக்கவேண்டும். தமிழ்த் தேசிய அரசியலில் எதிரும் புதிருமாக இருந்த தரப்புகள் ஒன்றாகத் திரளும்பொழுது அது மக்கள் மனதில் புதிய நம்பிக்கைகளை உருவாக்கும். கடந்த பௌர்ணமி நாளன்று தையிட்டியில் வழமையைவிடக் கூடுதலானவர்கள் திரண்டார்கள். அது ஐக்கியத்தின் பலம்.

அதுபோலவே செம்மணிப் புதைகுழிக்கு நீதி கேட்டு மக்களை வீதிக்கு கொண்டுவரலாம். தனது கட்சிக்காரருக்கு எதிராகவும் ஏனைய கட்சிகளுக்கு எதிராகவும் வழக்குப்போடும் அரசியல்வாதிகள் இந்தவிடயத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழக்குப்போடலாம். அவர்கள் அதைச் செய்வார்களோ இல்லையோ தமிழ்த் தேசிய பேரவையைப் பொறுத்தவரை அது ஒரு தேர்தல் மையக் கூட்டு அல்ல மக்கள்மைய அரசியலுக்கான ஒரு தொடக்கமே என்பதனை நிரூபிப்பதற்கான பொருத்தமான களம் அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி

விசும்பின் துளி வீழின் அல்லால்...

## உலக சுற்றுச்சூழல் தினம் யூன் 5

"நெகிழி மாசுபாட்டை முடிவுக்கு கொண்டு வருவோம்"

### நெகிழிகள் பாரியதோர் பிரச்சினை


ஆண்டுதோறும் உலகில் கிட்டத்தட்ட 400 மில்லியன் தொன்கள் நெகிழிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

அவற்றுள் 10% நெகிழிகள் மாத்திரமே மறுசுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்றன, மீதி

நீர்வாழ் உயிரிகளின் சூழலில் 11 மில்லியன் தொன்கள்

மண்ணிற்குள் 13 மில்லியன் தொன்கள்

### நெகிழிக் கழிவுகளால் ஏற்படும் சூழல் பாதிப்பு




### உடல் ஆரோக்கியப் பாதிப்புக்கள்

நெகிழிகள் நுண் மற்றும் நனோ நெகிழிகளாக உணவுச் சங்கிலியின் எல்லா நிலைகளுக்கும் கடத்தப்பட்டு ஆரோக்கியத்திற்குப் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

நுண் நெகிழிகள் தற்போது மழை நீர், கடலுணவு, மனிதக்குருதி உட்பட எங்கும் காணப்படுகின்றன!

80% மனிதர்களின் இதயம், மூளை மற்றும் நுரையீரல் ஆகியன டிரில்லியன் கணக்கான நுண் நெகிழிகளைக் கொண்டிருப்பதாக ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

*தரவு மூலம்:*
*ஐக்கிய நாடுகள் சபை*

# புலமையாளர் பதில்



கேள்வி : "இன்றைய நாட்களில் விவசாய இரசாயனங்கள் பாரிய விளைச்சலை மட்டும் கருத்திற்கொண்டு பயன்படுத்தப்படுகின்றனவே தவிர, நிலத்தடிநீர் பாதிப்புக்களை கவனத்திற்கொள்வதில்லை" இக்கருத்தின் உண்மைத்தன்மையினை வெளிப்படுத்தமுடியுமா?

(விதுரா, சுன்னாகம்)

பதில் : "விவசாயத்துக்கான செயற்கை இரசாயனப் பொருட்களை ஆய்வு செய்து உற்பத்தியாக்கும் நிறுவனங்களைச் சேர்ந்தோர், அவற்றை விற்பனைசெய்வோர் அனைவரும் பொதுவாகப் பயிரின் விளைச்சலை மட்டுமே முதல் இலக்காகக் கருத்திற்கொள்கின்றார்கள். அதே பொருட்கள் நிலத்தடி நீரையும், பரந்த சூழலையும் எவ்வாறு பாதிக்கின்றன எனும் விடயத்தைக் கருத்திற்கொள்வதில்லை" என்பது பெருமளவில் உண்மை தான் என்ற பதிலை இங்கு சொல்ல வேண்டியிருக்கிறது. ஆயினும் இன்று மனிதகுலம் எதிர்நோக்குகின்ற இந்த மிகப்பெரிய நஞ்சூட்டல் சிக்கலை இந்த ஒற்றைப் பதிலினுள் உள்ளடக்கிவிட முடியாது. எனவே அதன் பல பரிணாமங்களில் ஒரு சிலவற்றை இங்கே விளக்க முனைப்படுகின்றேன்.

உண்மையிலேயே அளவுக்கதிகமாகப் பயன்படுத்தப்படும் இரசாயன உள்ளீடுகள் ஏதோவொரு வகையில் நிலத்தடி நீரினை எட்டும் என்பது தெரிந்திருந்தும் அவற்றின் பயன்பாட்டினை இன்னும் அதிகப்படுத்துவதற்கான முயற்சிகளே நடக்கின்ற ஒரு காலத்தில் இதனை நாங்கள் உண்மை என்றுதான் கொள்ள வேண்டும்.

இரசாயனப் பொருட்கள் எனும் போது நெல் போன்ற தானிய விவசாயத்தில் பயிருக்குத் தேவைப்படும் கனிமப்பொருட்களை வழங்குகின்ற செயற்கை உரங்கள் ஒரு வகையாகவும், அதே பயிர்களைத் தாக்குகின்ற பூச்சி இனங்கள், மற்றும் உயிரிகளைக் கட்டுப்படுத்துவதற்கும், பயிருடன் வளரும் களைகளை அகற்றுவதற்கும் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் இன்னொரு வகையாகவும் இங்கே கருதப்படுகின்றன.

இப்பொருட்கள் செயற்கை வழிகளில் உற்பத்தி செய்யப்பட்டு பாவனையில் வருவதற்கு முன்னர், விவசாயத்தில் தனி இரசாயனப்பொருட்களாக எவையும் பயன்படுத்தப்படவில்லை. எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்து கடந்த ஐம்பது, அறுபது ஆண்டுகள் வரை இயற்கை வழங்குகின்ற மூலவளங்களை மீளச்சுழற்சி செய்து மண்ணினுள் பசளையாகச் செலுத்தி அதன் பெறுபேறாகவே விவசாயம் நடந்துவந்ததென்று நான் கூறினால் நம்ப முடிகிறதா? கடந்த ஐந்தாறு தசாப்தங்களில் இவ்வுள்ளீடுகள் உற்பத்திப் பொருட்களாக வந்ததற்குரிய காரணங்களை நாம் புரட்டிப் பார்க்க வேண்டும்.

இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் ஏற்பட்ட உலகளாவிய உணவுப் பற்றாக்குறையின் வடிவங்களாக இந்திய உபகண்டத்தில் நிலவிய பஞ்சம் முதல் 1970 களின் ஆரம்பத்தில் இலங்கையில் நிலவிய உணவுத்தட்டுப்பாட்டு அனுபவம் வரை நாம் கண்ட நிலை மாறி அத்தகைய உணவுப் பற்றாக்குறையை தொழில்நுட்பசாதனைகள்மூலம் தீர்த்துவிடலாம் என்ற துணிவோடு கொண்டுவரப்பட்டது தான் பசுமைப்புரட்சி என்ற முக்கியமானதொரு விவசாய முயற்சியாகும்.

அதன் பெறுபேறாக பெருவிளைச்சல் தரும் நெற்பயிர் வகைகளும் அத்தகைய பயிருக்குத் தேவைப்படும் ஊட்டச்சத்துகளை செயற்கையாக வழங்கவல்ல இரசாயன உரங்களும் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து விளைச்சலில் உயர்ந்த பயிர்வகைகளைத் இலேசாகத் தாக்கவல்ல பல்வேறு வகையான நோய்களையும், கிருமி பூச்சிகள், களைகளையும் கட்டுப்படுத்தவென வலுமிக்க இரசாயனங்களும் கண்டறியப்பட்டு வெளிவந்தன.

இவ்வகை பூச்சி, களைகொல்லி இரசாயனப்பொருட்கள் நச்சுத்தன்மையில் மிக மோசமான குணங்களைக் கொண்டிருந்தாலும் அவற்றினை அவதானத்தோடு சரியான வகையில், சரியான அளவில், சரியான நேரத்தில் பயன்படுத்தினால் அவை பயனுள்ளவையே எனும் அடிப்படையிற்தான் இவ் இரசாயனங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. கூடவே நீர்ப்பாசனமும், இயந்திரமயப்படுத்தலும் பெற்றுத்தந்த விளைச்சலை சிறந்த வகையில் பதனிட்டு, பொதியிடும் வழிமுறைகளும் சேர்ந்த ஒரு நவீன விவசாய உற்பத்தியின் விளைபொருட்களையே இன்றைய தலைமுறையினர் அன்றாட உணவாகச் சந்திக்கின்றார்கள்.

இதனைப் பசுமைப்புரட்சியின் வெற்றியென நாம் கருதினாலும்கூட நீங்கள் கேட்ட கேள்வியில் உள்ளடங்கிய மனித உடல்நலம் மற்றும் மண்ணில் வாழ்கின்ற உயிரினங்களுக்கும், மண்ணுக்குமே ஆபத்தை விளைவிக்கின்ற இவ்விரசாயனப் பொருட்களை பசுமைப்புரட்சியின் மறுபக்கமாகவே நாம் பார்க்கவேண்டியுள்ளது.

உற்பத்தி செய்தவர்கள் சொல்கின்ற அளவில், வகையில் பயன்படுத்தப்படாமல் அளவுக்கதிகமாகவோ, அதிலும் குறிப்பாக இப் பொருட்கள் மானியமாக மலிவு விலையில் அரசினால் வழங்கப்படும் போதும் அறியாமையின் மத்தியில் விவசாயிகள் சொன்ன விகிதத்தை விடப் பல மடங்கு அதிகரித்த வகையில் அவற்றைப் பயன்படுத்தும் போது அவை நச்சுப்பொருட்களாக மாறியிருப்பது தான் இன்றைய யதார்த்தம். இதற்காகவே தான், இந்த ஆபத்தைத் தரக்கூடிய, நிலத்தடிநீரின் மூலம் மனித உடலைச் சென்றடையக்கூடிய இரசாயனப் பொருட்களின் பாவனையைத் தணிப்பதற்கும், அவற்றைத் தவிர்ப்பதற்கும், அவற்றின் மாற்றுவழியாக வெவ்வேறு இயற்கைவழி இயக்கங்களும் தோன்றியுள்ளன.

இலங்கையின் நிலையுடன் நாம் ஒப்பிட்டுப் பார்ப்போமானால் அன்றாட உணவுக்குத் தேவையான அரிசியை, தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்களை உற்பத்தி செய்த வருமானத்தில் இறக்குமதி செய்த நாடாக 60 ஆண்டுகளுக்கு முன் இருந்த இலங்கை அந்த ஏற்றுமதி வருமானம் குறைந்தபோது அரிசிக்கும், சீனிக்கும், கோதுமை மாவுக்கும் விலை கொடுக்க முடியாத ஒரு இடத்தில், எழுபதுகளின் ஆரம்பத்தில் ஒரு நெருக்கடியையும், உணவுப்பற்றாக்குறையையும் சந்தித்தது வரலாறு.

பின்னர் நெல்லுற்பத்தியில் தன்னிறைவு கண்டு சாதனை படைத்து, எல்லோருக்கும் போதியளவு அரிசி ஒரு நிகர விலையில் கிடைத்த காலம் மறக்க இயலாதது. அதையும் தாண்டி வடகிழக்கின்மீது விதிக்கப்பட்ட இரசாயனப்பொருட்களின் தடை காரணமாக விவசாயம் செய்த காலம், அதனையும் கடந்து ஒரு புதிய நிலையில் மீளவும் இன்னோர் உணவு நெருக்கடியினை அண்மையில் சந்தித்து இன்று நச்சுப் பொருட்களைப் பற்றியும் அவை உடலைப் பாதிக்கின்ற தன்மையைப் பற்றியும் பேசவேண்டிய இடத்துக்கு வந்திருக்கிறோம் என்பது எமது விவசாய வளர்ச்சியின் ஏற்றமும், வீழ்ச்சியும் இரண்டறக் கலந்த நீண்டதொரு கதை.

இதை எல்லாம் நான் சொன்ன பரிமாணத்தில் வரலாற்று ரீதியாகப் பார்க்கும் போது இவ்விரசாயனப்பொருட்களை உற்பத்தி செய்பவர்கள், அவற்றை விற்பனை செய்பவர்கள், அவற்றை மக்களுக்கு அறிவுரையாக வழங்குகின்ற முகவர்கள், அரச விவசாயத்துறைக்கு பொறுப்பாகவுள்ள அரச அலகுகள், உள்ளீடுகளை வழங்குகின்ற மற்றைய அரச பகுதிகள் எல்லோரும் இந்த விடயத்தில் பொறுப்புள்ளவர்களாகவும், இதற்கான கல்விக்குப் பொறுப்பான கல்லூரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் விவசாய பீடங்கள் என அனைத்து, முழுமையான அறிவினைப் பொறுப்புடன் வழங்கியும் மருத்துவர்களும் உரிய எச்சரிக்கைகளைச் சரியான கணிப்புகளின் அடிப்படையில் தெளிவுபடுத்தினால் மற்றைய நாடுகளில் ஏற்பட்டிருப்பதைப்போல ஓர் எச்சரிக்கை, அவதானம், பொறுப்புள்ள சமூகத்தைக் நாமும் கனவு காணலாம். அது வரையிலும் இக்கேள்வி எம்மை அலைக்கழிக்கத்தான் போகின்றது.

**பேராசிரியர் ந. சிறீஸ்கந்தராஜா**
*சுவீடன் விவசாயப் பல்கலைக்கழகம்*
*WASPAR செயற்றிட்டம், யாழ். பல்கலைக்கழகம்*

## அறைகூவல்!

**"வழுக்கையாற்றை நோக்கிய மற்றொரு பயணம்" - 2025**

திகதி 21.06.2025 (சனிக்கிழமை)
காலை 7.00 மணி, மருத்துவபீடம், யாழ் .பல்கலைக்கழகம்



## இளையோர் பார்வை

# நெகிழிகள் வேண்டாமே!


*நெகிழி பிரச்சினையின் உருவமே! - அது*
*எம்மையும், சூழலையும் பாதிக்குமே!*
*அறியாமையால் அறிவிழந்து செயற்படும் எம் எதிர்காலம்*
*நோய் நொடிகளால் ஆக்கிரமிக்கப்படுமே!*
*இதை உணராத உலகத்தவரின் உண்மை நிலை*
*உரைக்கப்படுமா? மறுக்கப்படுமா?*
*செயற்படுவோம் ஒன்றாக! வற்புறுத்துவோம் வலிமையாக!*
*நெகிழிகள் வேண்டாமே!*



**S. கௌசிகா, கொக்குவில்**

*எதிர்வரும் ஜூலை மாதம் 20 ஆம் திகதி துளியின் 15 ஆவது இதழ் உங்கள் கைகளை நாடிவரும். வடமாகாணத்து நீர்வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:* **Water Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemeology, Faculty of Medicine, University of Jaffna;** *மின்னஞ்சல்:* **water@univ.jfn.ac.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெக்கைக்குள் ஒரு 'சூம் மீட்டிங்'

சஞ்சீவி சிறுகதை

O மகேசன் கஜேந்திரன்

மண்டையோட்டு மாளிகைக்குள், மூன்று மென்சவ்வுகளின் பாதுகாப்பு வலயத்துக்குள் மிகவும் பாதுகாப்பாகவும் பத்திரமாகவும் மிடுக்காகவும் இருந்தார் 'மிஸ்டர் பிறெய்ன்'. இவரை எங்கள் தமிழ் மக்கள் 'மூளை மகாராஜா' என்றும் அழைப்பார்கள். ஆனால் தமிழ் அகராதியில் "மூளை" என்றொரு சொல் இல்லை என்றும் சொல்கிறார்கள்.

தனது கட்டளைகளைச் செயற்படுத்தும் தளபதிகளுக்கு "சூம் மீற்றிங்" ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார் மிஸ்டர் பிறெய்ன்.

"வணக்கம்…வந்தனம். இந்த மீற்றிங்கிலை கலந்துகொள்ளுகின்ற அனைவருக்கும் வணக்கம். முக்கியமா கிட்னிஸ் குறூப் ஒவ் வெயின்ஸ். ஸ்கின் எல்லாருக்கும் சிலவேளை பிறசன்டேசன் செய்யவேண்டியிருக்கும். அக்கறையா கிரகியுங்கோ" என்று ஆரம்பித்தார் மிஸ்டர் பிறெய்ன். உறுப்புரிமைக்காரர் எல்லாம் கிசுகிசுத்தனர் "என்ன இண்டைக்கு தொரை இங்கிலீசு பேசுது?"

"கிட்னிஸ்..வெய்ன்…ஸ்கின் எண்டதை தமிழிலை சிறுநீரகங்கள்…நாளங்கள்…தோல் எண்டு சொல்லி இருக்கலாம்தானே" என குரல்நாண்கள் உறுமின. அவ்வளவு மொழிப்பற்று அவற்றுக்கு. மூளை.. தொடர்ந்தது.

"வடமாகாணத்திலை சில பகுதிகளிலை வெயில் அகோரம். சூழல் வெப்பநிலையும் எகிறப்போகுதாம்.எங்களுக்கெல்லாம் இருப்பிடம் தந்த எங்கடை முதலாளியைக் காப்பாற்ற வேண்டியது எங்கடை பொறுப்பு. பாவம் மனுசன். நாங்கள் சீராக இயங்க எவ்வளவு சத்துகளைச் சாப்பிட்டுத் தொலைக்குது. அது மண்டையைப் போட்டா நாங்கள் இருக்கப்போறமே.. இல்லைத்தானே. ஆனபடியால அந்தாளை சூழல் வெக்கையில இருந்து பாதுகாக்கவுள்ள நடவடிக்கைகளை விளங்கப்படுத்தத்தான் இந்தச் சந்திப்பு" என்றது மூளை.

"மனுசனின்டை உடல் வெப்பநிலை 98.4 பாகை பரனைட் எண்டு தெரியும். அது 100..103.. எண்டு போனா கடுங்காய்ச்சல் எண்டும் விளங்கும். 107 பரனைற்றுக் மேல போனால் உயிருக்கு ஆபத்து உண்டாகும். சூழல் வெப்பநிலை சாதாரணமா 37 பாகை செல்சியஸ். இது 40 பாகை செல்சியஸுக்குப் போனால் மனுசன் படப்போற பாடு வில்லங்கமானது எண்டு ஓ/எல் படிச்ச பிள்ளைகளுக்கே தெரியும். உங்களுக்குத் தெரியாததா என்ன? சூழலிலை வெப்பம் வெக்கை உயரும்போது மிகக் கவனமெடுத்து நாங்கள்தான் இயங்கவேணும் கண்டியளோ. அதுக்கான விசயங்களைத்தான் சுருக்கமாச் சொல்லப்போறன் கவனியுங்கோ பெடியள்" மூளை மேலும் தொடர்ந்தது.

"என்னட்டை…ஹைபோதலமஸ் எண்டொரு அசிஸ்ரன்ட் இருக்கிறார். பரிவகக்கீழ் எண்டும் அவரைச் சொல்லுறவை. அவருக்குள்ளால குருதி ஓடேக்க நான் கண்டுபிடிச்சுப்போடுவன் மனுசனின்டை அதுதான் எங்கடை முதலாளியின்ர உடல் வெப்பம் ஏறுதெண்டு. அப்ப என்ரை ஓடர்கள் உங்கள் எல்லாருக்கும் கண்டபடி பறக்கும். அலேர்ட்டா இருந்துகொள்ளுங்கோ பெடியள்"

மூளையின் அறிவுறுத்தல்களை அவதானிக்காமல் அசண்டையீனமாக கதைத்துக்கொண்டிருந்த சோடிச் சிறுநீரகங்களைப் பார்த்ததும் மூளைக்குச் சற்றுக் கோபம் வந்துவிட்து.

"கிட்னிஸ்..அட்டென்ஷன் பிளீஸ்.எங்க போனாலும் புருஷன் பொஞ்சாதி மாதிரி பின் நாரிக்கிள்ள இருந்து கதைக்கிறதுதான் உங்கடை ரெண்டுபேரின்டையும் வேலை. அலட்டலை விட்டிட்டுக் கவனமாக் கேளுங்கோ. முதலாளியின்ர உடல் வெப்பம் கூடுகிற வேளை நீங்கள் ரெண்டுபேரும் உங்கடை வடிகட்டல் செயற்பாட்டைக் குறைச்சுப்போடுங்கோ. சொல்லிப்போட்டன்."

"நாளாந்தம் 24 மணித்தியாலத்திலை அதாவது 1440 நிமிசத்திலை நிமிசத்துக்கு ஒரு மில்லிலீற்றர் எண்டபடி கிட்டத்தட்ட ஒண்டரை லீட்டர் சிறுநீரை வடிக்கிற நீங்கள் வெக்கை நேரத்திலை உங்கடை வடிகட்டலைக் குறைக்கவேணும் பாருங்கோ. இதே நேரம் விசேடமாக நானும் சில காரியங்களைச் செய்விச்சு அவரின்டை அதுதான் மனுசனின்டை அனுசேபத்தைக் குறைச்சுப்போடுவன்."

"அவரும் துடியாட்டத்தைக் குறைச்சுப்போடுவார். இதனால அவற்றை உடம்புக்குள்ளையும் வெப்பப்பிறப்பாக்கம் குறைஞ்சுபோடும். நீங்கள் எல்லாரும் பாத்திருப்பியள்தானே? அங்குமிங்குமாய் ஓடியோடி மேய்ஞ்ச மாடுகள் மத்தியான வெயில் நேரத்திலை மர நிழலுக்குள்ள உடம்பை ஆட்டாமல் அசைக்காமல் ஆசுவாசமாகப் படுத்துக்கிடக்கிறதை. அது அனுசேபத்தைக் குறைக்கத்தான் பாருங்கோ. அப்படித்தான் எங்கடை முதலாளி என்ற மனிசரையும் சோரப்பண்ணிப்போடுவன்."

"இது மட்டுமே உடம்பிலுள்ள கலங்கள் எல்லாம் சுருங்கத் தொடங்க நரம்புக்கலங்களைத் தூண்டிவிட்டு முதலாளிக்குத் தண்ணித்தாகத்தையும் உண்டாக்கிப்போடுவன். அவரும் அலக்கு மலக்குப் பட்டுத் தண்ணி தண்ணியாக் குடிப்பார் பாருங்கோ.மோர், இளநீர்,வத்தகப்பழம் எண்டு கடை கடையாத் திரியவும் செய்வார்."

அடுத்து, மூளை சில விடயங்களை, தோலைப் பார்த்துச் சொல்லத் தொடங்கியது.

"இப்ப நான் சொல்லப்போறதை தோழர்… மன்னிக்கவும்… தோலர் கேட்டுக்கொள்ளுங்கோ"

தோலும் தோளை நிமிர்த்திக் கேட்கத் தொடங்கியது.

தோலைப் பற்றி மூளை புகழத்தொடங்கியது.

தோலும் புளகத்திலை "ஆலுமா டோலுமா" எண்டு பாட்டோடை ஆட ஆரம்பித்துவிட்டது.

"தோலர் உம்முடைய டான்ஸை நிப்பாட்டும் சிற்றுவேஷன் தெரியாத ஆளப்பா நீர். உம்முடைய பெருமைகளைத் திரும்ப ஒருக்காச் சொல்லுறன். முகத்தைத் திருப்பாமல் கேளுங்கோ! நீங்கள் மனுசன்ரை உடம்பைப் பாதுகாக்கிற ஆறு படை ராசா. மனுசரின்ரை உடம்பில ஒம்பது இடங்களிலை மட்டும் இல்லாத மிகப் பெரிய உறுப்பர் நீங்கள்தான் ராசா. உங்களை உரிச்சுக் கிடத்தினா அதாவது 5 அடி நீள 4 அடி அகல மேசைப் பலகையை மறைச்சுப் போடுவியள். மனுசனின்ரை எடையை சராசரி 50 கிலோ எண்டு வைச்சா நீங்கள் 8 கிலோ வருவியள். சூடு சுரணையான ஆள் நீங்கள்தான் பாருங்கோ. கண் பாக்காமலே விரல் நுனியில இருக்கிற நீங்கள் எப்படிப்பட்ட பொருள் எண்டு தொட்டே சொல்லிப்போடுவியள்… சரி..சரி..விசயத்துக்கு வருவம். கனநேரம் அலட்டிறன் போல."

"மூளைப் பிள்ளையரைக் கொன்ரோல் பண்ணுறதெண்டால் அது ஒரு தனிக்கலை பாருங்கோ" என்று தன்னையே தொட்டிக்காட்டிப் பேசியது மூளை. முடிவெடுத்தா என்ரை சொல்லை நானே கேக்கமாட்டன் எனப் பஞ்ச் டயலக்கும் அடித்தது மூளை.

"தோலர் உம்முடைய கடமைக் கூறைச் சொல்லுறன் கேளும்". தோல் படபடவெனக் குறிப்பெடுக்கத் தொடங்கியது.

"சூழல் வெப்பம் அதிகரிக்க உடம்பு வெப்பமும் அதிகரிக்காமல் இருக்கவேணுமெண்டால் தோலர் நீங்கள் கடகடவெண்டு வியர்வையை வெளியேற்றுங்கோ. இரத்த நாளங்களும் விரிஞ்சபடி உங்கடை மேற்பரப்புக்குக் கிட்ட வந்திருவினம். அவையளைக் கண்ட வெக்கத்திலை நீங்களும் சாடையாச் சிவந்து போடுவியள் " என்று கொடுப்புக்குள் சிரித்தது மூளை.

"உடம்பு வெப்பம் அதுகள் அதுதான் நாளங்கள் கொண்டுவாற குருதியிலை இருந்து உங்களுக்குள்ளால வெளிய போய்க்கொண்டிருக்கும். சராசரியாக ஒரு மணித்தியாலத்துக்கு ஒன்றரை லீற்றர் வியர்வையை வெளியேத்திற நீங்கள் இப்படியான நிலைமைகளிலை இன்னும் அதிகமாக வெளிவிடவேண்டிவரும். தோலர் நீங்கள் ஒரு களி மண்பானை மாதிரி" என்று சொன்னதும், தோல் திடுக்கிட்டுப்போனது. இவ்வளவு நேரமும் தன்னைப் புகழ்ந்துவிட்டு இப்போது களிமண் என்று மட்டம் தட்டுகிறார் என நினைத்து தோலின் முகம் கறுத்ததை மூளை கவனிக்கத் தவறவில்லை.

"தோலர் கவனியுங்கோ! துளைகளுக்குள்ளாலை மண்பானைத் தண்ணி கசிஞ்சு ஆவியாகிக்கொண்டிருக்க, உள்ளுக்குள்ள இருக்கிற தண்ணி "ஜில் " எண்டு இருக்குமாப்போல உம்முடைய துளைகளுக்குள்ளாலை வியர்வை வெளியேறி ஆவியாக உமக்கு உள்ள இருக்கிற உடலும் குளிர்மையாக இருக்கும் எண்டதைத்தான் சொல்ல வந்தனான் " என்றதும் தோல் புளுகத்தில் விசில் அடிக்கவும் செய்தது.

"தோலர் யூ ஆர் கிறேட்" என்று மூளை சொன்னதுதான் தாமதம் தோலில் இருந்த உரோமங்களுக்கு, தம்மை ஒரு பொருட்டாக மூளை கருதாததால் கோபம் வந்துவிட்டது. "என்ன மயிருக்கே நாங்கள் இருக்கிறம்? இந்தக் கூட்டத்துக்கு எங்களை மயிருக்கே கூப்பிட்டணியள்?" என்று கோரஸாகக் கேட்டன தோலில் இருந்த உரோமங்கள். எல்லா உறுப்புகளும் திடுக்கிட்டுப்போயின. தலைவரைப் பார்த்து இப்படியா கதைப்பதென. தோலருக்கு இப்பவே பயத்தால் வியர்க்கத்தொடங்கிவிட்டது. ஒரு நிமிடம் மயான அமைதி நிலவியது. மூளை சற்றுச் செருமிய பின் பேசத்தொடங்கியது.

"சொறி..ஹெயார்ஸ்…றியலி..சொறி நான் உங்கடை பங்கைச் சொல்லாதது பிழைதான். ஆரம்ப மனிதனிலை உடம்பு முழுக்கப் பரம்பியிருந்த உங்கடை இனம் அழிஞ்சு இப்ப 5 லட்சம் வரை இருக்கிறதாலை அதுவும் நாலு ஐஞ்சு இடத்திலதான் செறிவா இருக்கிறதாலையோ தெரியாது ஆதங்கத்திலை கோபப்பட்டிட்டியள். தோலிலை உள்ள மயிர்ப்புடைப்புகள் நிறுத்தித் தசைகளுக்கூடாக உங்களை இயக்கிற பிளான் இருந்தபடியால சொல்லாமல் விட்டிட்டன்" எண்டு சமாளித்தது மூளை.

'அதுக்காக மயிர் எண்டு சொன்னது பிழைதானே' என்று உசுப்பேத்தியது குருதிநாளம்.

'இல்லவே இல்லை மிஸ்டர் வெய்ன். மயிர் நல்ல தமிழ்ச் சொல்லுப் பாரும்

மயிர்நீப்பின் உயிர்வாழாக் கவரிமான் எண்டு திருவள்ளுவரே சொல்லியிருக்கிறார் பாருங்கோ…….'


'ஏன்…மயிராண்டி எண்ட சொல்லுக்கூட பிழையில்லாதது. சடாமுடி தரித்த ஆண்டிக்கோலம் பூண்டு திரிபவர்களை மயிராண்டி எண்டும் கூப்பிடலாம்' என்று எல்லோருக்கும் வகுப்பெடுத்தார் மூளையார்.

'சரி..சரி..மயிர்களே! உரோமங்களே முடிகளே…முடியலை… உங்கடை ஆய்க்கினை….எண்டாலும் உங்கடை செயற்பாட்டையும் சொல்லுறன் கேளுங்கோடாப்பா, 'உரோமப் பேரரசர்களே!!' என்று சற்று நக்கலாகக் கூறி குசும்பு பண்ணியது மூளை.

நீங்கள் குளிர்காலத்திலை நிக்குமாப்போல எழும்பி மயிர்க்கூச்செறியுமாப் போல நிலைக்குத்தாக நில்லாதையுங்கோ. நீங்களும் அரிதிற் கடத்தி… உங்களுக்கிடையிலை சிறைப்படும் வளியும் அரிதற்கடத்தி.. பேந்தென்ன..மனுசன்ரை உடல் வெப்பம் வெளியபோகாமல் தடுத்துப்போடுவியள்.ஆனபடியாலை உடல் வெப்பம் அதிகரிக்கிற நேரங்களிலை தோலிலை சாய்ந்துப்படுத்திருங்கோ. வளிப்படையும் அம்பிடாது வெப்பமும் தடக்கில்லாமல சூழலுக்குப் போய்க்கொண்டிருக்கும் ஆமிக்காறன் ஷெல் அடிக்கேக்கை தரையில சனம் படுத்ததை மறக்கேலுமே. அப்படித் தோலிலை கிடையாகத் தழுவியிருங்கோ. வேறையென்ன உறுப்ஸ் கூட்டத்தை முடிப்பம்.

எல்லாரும் என்ரை சிக்னலை எதிர்பார்த்துக்கொண்டு இருங்கோ" என்று சொன்னபடி மண்டையோட்டு மாளிகைக்குள் இருந்துகொண்டு நரம்பு மண்டலத்தை முடுக்கத்தொடங்கினார் மிஸ்டர் பிறெய்ன் என்கிற மூளையார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



○ எம்.முபாறக்

# அறிந்தும் அறியாமலும்

## மாணிக்கம் ஐயா மாணிக்கம்!

முன்னாள் அமைச்சர்களின் சட்டவிரோதமாக ஈட்டப்பட்ட சொத்துகள் தொடர்பில் லஞ்ச,ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சொத்துகள் ஈட்டப்பட்ட விதத்தைச் சரியாகச் சொல்ல முடியாமல் தடுமாறும் முன்னாள் அமைச்சர்கள் வாயில் வந்த காரணங்களையெல்லாம் அடித்து விடுகிறார்களாம்.

அதில் ஒரு முன்னாள் அமைச்சர் இப்படியொரு 'குபீர்' காரணத்தை சொன்னாராம் 'எனக்கு இரத்னபுரியில் மாணிக்கக்கல் சுரங்கம் இருக்கு.சில காலங்களுக்கு முன் மிகவும் பெறுமதி வாய்ந்த கற்கள் அதில் கிடைத்தன.அவற்றை தாய்லாந்து பிரஜை ஒருவருக்கு அதிக விலையில் விற்றேன்.அதில் கிடைத்த பணத்தை வைத்துத்தான் சொத்துகள் வாங்கினேன்' இதனை அவர் வீட்டில் உள்ளவர்களே நம்பமாட்டார்களே, லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் மட்டும் நம்புவார்களா? அந்த முன்னாள் அமைச்சரிடம் தான் மற்றவர்களை விடவும் அதிக விசாரணை நடக்கிறதாம்.

## அடுத்த ஜனாதிபதி ஹரிணி?



இந்த ஆட்சியை எப்படியாவது வீழ்த்த வேண்டும் என்பதுதான் ரணில் விக்ரமசிங்கவின் திட்டம். அதற்காக அவர் மறைமுகமாகப் பல வேலைகளைச் செய்து வருகிறார்.பல திட்டங்களை வகுத்து வருகிறார். அதில் ஒன்றுதான் பிரதமர் ஹரிணி அமர சேகர மீதான குறி. ஹரிணியை எப்படியாவது இந்த அரசில் இருந்து உடைத்து எடுத்துவிட்டால் அரசை வீழ்த்திவிடலாம் என்பது ரணிலின் நம்பிக்கை.

அவரது திட்டம் ஹரிணியை உடைத்தெடுத்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அவரைப் பொது வேட்பாளராக நிறுத்துவது தானாம்.அப்படி நிறுத்தினால் அடுத்த தேர்தலில் அநுரவைத் தோற்கடித்துவிடலாம் என்று நம்புகிறார் ரணில்.

இதற்குத் துணையாக செயற்படுபவர் ரணிலின் இப்போதைய வலதுகையான மிலிந்த மொரகொட.. அவரது 'பாத் பைண்டர்' என்ற அமைப்பு இதற்காக பல வேலைகளைச் செய்து வருகிறது.

கொழும்பு மத்தியில் உள்ள அரசியல் சூழ்ச்சி செய்யும் ஒரு விகாரையில் இருந்து ரணில் தரப்பால் ஹரிணிக்கு பல தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. எல்லாம் அவரைப் பிரித்தெடுக்கும் தகவல்கள்தானாம். பார்ப்போம் மீண்டும் ரணிலின் பிரித்தாளும் தந்திரம் பலிக்கின்றதா என்று.

## ஊமையாகிய சஜித்!



அரசுக்கு 50 வீத பெரும்பான்மை இல்லாத சபைகளில் எப்படியாவது நாம் ஆட்சி அமைத்துவிட வேண்டும் என்ற வேகத்தில் ஓடித் திரிகிறாராம் சஜித் பிரேமதாஸ.

ஓயாத கூட்டங்கள்.இடைவிடாத பேச்சுக்கள். இதனால் தொண்டையில் காயம் அவருக்கு.

சற்று ஓய்வு எடுக்குமாறு மருத்துவர்கள் அறிவுரை சொல்லியும் ,அவர் ஓயவில்லை.

இப்போது வீட்டில் இருந்துகொண்டு 'சூம்' மூலம் கூட்டங்களை நடத்தத் தொடங்கியுள்ளார்.

தொண்டையில் காயமென்பதால் சஜித் பெரிதாகப்பேசுவதில்லை. மற்றவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டு இருப்பது மாத்திரம்தான் சஜித்தின் வேலை. இடைக்கிடை சைகையால் மட்டும் தன் அபிப்பிராயத்தை தெரிவிப்பாராம். எப்பிடியிருந்த சஜித் இப்படியாகிவிட்டாரே.



## திசைமாறும் திசைகாட்டி

கொழும்பு மாநகரசபையில் தனித்து ஆட்சி அமைக்க முடியாத நிலையில் எதிர்க்கட்சியும் அரசும் இருப்பதால் அவர்கள் ஏனைய கட்சி உறுப்பினர்களை வளைத்துப் போட்டு ஆட்சி அமைப்பதற்கான இரகசிய வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த அடிப்படையில் அமைச்சர் ஒருவர் இங்கிலாந்தில் இருக்கும் ஒருவரின் ஊடாக உறுப்பினர்களை வளைக்கும் பார்த்து வருகிறாராம்.

கொலன்னாவையில் இருக்கும் அரச எம்.பி. ஒருவரின் ஊடாகவே அந்த இங்கிலாந்துப் புள்ளியை மடக்கி இந்த உதவியை நாடி இருக்கிறாராம் அமைச்சர்.

இப்படி கள்ளவழியில் ஆட்சியமைக்க முனைவதெல்லாம் அரசின் கொள்கைக்கு அடுக்குமா? திசைகாட்டி திசைமாறத் தொடங்கிவிட்டதா?

## இதெல்லவோ பிளான்!

சர்வதேச தொடர்புகள் அதிகம் இருக்கும் ஒரு தலைவராகத் தன்னைப் போலியாக காட்டிக் கொண்டு வருகிறார் ரணில்.

பதவி இல்லாதபோதிலும் சர்வதேசத் தலைவர்கள் இவரை அழைத்துப் பேசி வருகிறார்கள் என்றொரு போலிப் படத்தைக் காட்டி வருகிறார் அவர்.

பக்கா 'பிளான்' போட்டு அதைச் செய்து வருகிறார்.சர்வதேச நாடுகளில் நடக்கும் நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கு இவரே விண்ணப்பிக்கிறார்.அந்த விண்ணப்பத்திற்கு அனுமதி கிடைத்ததும் போய் கலந்துகொள்கிறார்.அங்கு வருகின்ற தலைவர்களுடன் கைகுலுக்கி ஏதோ பெரும் பேச்சில் ஈடுபட்டதுபோல் காட்டி 'போட்டோவும்' எடுக்கிறார்.

அதை தனக்கு விசுவாசமான ஊடகவியலாளர்கள் மூலம் பிரபல்யப்படுத்துகிறார்.


இதைப் பார்த்துவிட்டு. ரணிலுக்கு இன்னும் சர்வதேச செல்வாக்கு உண்டு என்று மக்கள் நினைக்கிறார்கள். பெரிய பெரிய நாடுகளின் தலைவர்கள் எல்லோரும் தன்னை வெற்றிலை.பாக்கு வைத்து அழைத்து . கலந்துரையாடுகின்றனர் [illegible] எப்படியோ நம்பவைத்துவிட்டார் ரணில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
15 ஜுன் 2025

# பண்டைய தமிழ் இலக்கியங்களில் புத்தபெருமானின் போதனைகள்

பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
நிகழ்ச்சித்திட்டத் தலைவர்,
சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்,
முகாமைத்துவ அலகு,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.




"நெல்அறிய இருந்தொழுவர்;" (புறம்: 24), "அழல் புரிந்த அடர் தாமரை"(புறம்:29), "பாறு படப் பறைந்த பன்மாறு மருங்கின்"(புறம் :359) போன்ற புறநானூற்றுப் பாடல்களில் முன்னர் கூறப்பட்டது போல் மன்னனின் புகழ்பாடி அன்பளிப்புப் பெறும் புலவர்கள் அவ்வேளையில் நிலையாமையையும் வலியுறுத்தி அதன் வழியே மன்னனின் ஈகைப் பண்பினைத் தூண்டும் வகையிலான கருத்தியல்களை வெளிபடுத்தியமை இப்பாடல்களிலும் பிரதிபலிக்கின்றன. ஆனால் இத்தகைய பாக்களினை ஆழ நோக்குகையில் அறம், பொருள், இன்பம் ஆகிய உறுதிப்பொருள்களினைப் புலவர்கள் நாடாண்ட மன்னர்களுக்குத் தெளிவுபடுத்தி அதன்வாயிலாக வாழ்வின் நிலையாமையினை நிதர்சனப்படுத்தியிருக்கின்றனர் என்ற பேருண்மை சித்தரிப்பானது. மேலும் காஞ்சித்திணையில் அமைந்த வான்மீகியார் என்ற புலவர் எழுதிய "பருதி சூழ்ந்த இப் பயங்கெழு மாநிலம்" என ஆரம்பிக்கும் 358ஆவது புறநானூற்றுப் பாடலில், துறவறத்தின் பண்புத் தெளிவாக எடுத்துரைக்கப்படுவதுடன், துறவு என்னும் புனித செயற்பாட்டில் ஈடுபடமுடியாதவர்களே இல்லறத்தினை மேற்கொள்வதற்குரியவர் ஆகின்றனர் என்ற தொனிப்பொருளில் இப்பாடல் அமையப்பெற்றுள்ளது.

பௌத்த காப்பியம் என அழைக்கப்படுகின்ற மணிமேகலையில் நிலையாமை குறிந்த பல கருத்துகள் இடம்பெறுகின்றன. பௌத்த தர்மத்தின் பிரகாரம் உலக வாழ்க்கை துன்பமயமானது. மறுபிறப்பு என்பது அத்துன்பத் தொடர் அழிந்து போகாமல் வழி வழியாக வளர்க்கும் சாதனமாகும். பிறவாமையே மாந்தர்க்குரிய விழுப்பொருள். அதனையே மனிதகுலம் கருத்திற்கொள்ளவேண்டும். பிறவாமை வேண்டில் பற்றற்ற முறையில் பயன் நோக்காது நற்கருமங்களினைச் செய்யவேண்டும். இக்கருத்தமைவே பௌத்தத்தின் அடிப்படையான கருத்தமைவதாகும். இது மணிமேகலையில் உளநலனுரைத்த காதையில் பின்வரும் வரிகளின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

*பிறந்தோ ருறுவது பெருகியதுன்பம்*
*பிறவா ருறுவது பெரும்பேரின்பம்*
*பற்றின் வருவது முன்னது பின்னது*
*அற்றோ ருறுவ தறிகென் றருளி* (மணி - 2: :64-67)

எனவே மனிதன் இவ்வுலகின் நிலையாமையினைப் புரிந்துகொள்ளவேண்டும். நம் உயிர் தங்கியுள்ள கூட்டின் (உம்பின்) இளமை நிலைத்துநிற்காது. எம் உடம்போ நிலையற்றது. அலைந்து அலைந்து சேகரிக்கும் செல்வமும் நிலையற்றது. தாம்பத்திய உறவின் சான்றுகளான புதல்வர்களின் உறவும் நிலையற்றது. இரு மனங்களின் இணைப்பாண திருமண உறவில் வந்த மனையாள் எனும் உறவும் நிலையற்றது. மாறாக அறம் ஒன்றே நிலையானதாகும்.

*இளமையும் நில்லா யாக்கையும் நில்லா*
*வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா*
*புத்தே உலகம் புதல்வரும் தாரார்*
***மிக்க அறமே விழுத்துணையாவது* (மணி 22: 135-139)**

இந்துசமயத்தின் வேதம், மற்றும் உபநிடதங்களும்கூட நிலையாமை குறித்த கருத்துகளினையே வலியுறுத்தின. அதேவேளை பௌத்த தத்துவங்களின் ஊடுருவலுக்குப் பின்னர் எழுச்சியுற்ற பக்தி இலக்கியங்களும் நிலையாமை குறித்த ஆழமான பல்பரிமாணப் பார்வையினைக் கொண்டிருந்தன. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக திருமூலரினால் அருளிச் செய்யப்பட்ட திருமந்திரத்தின் முதலாவது தந்திரத்தில் யாக்கை நிலையாமை (143-167), செல்வம் நிலையாமை (168-176), இளமை நிலையாமை (177-186), உயிர் நிலையாமை (187 196) போன்றன குறித்து அழகாகவும் ஆழமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இங்கு மனித உடலானது ஐம்பூதங்களினால் அதாவது நீர், நிலம், நெருப்பு, ஆகாயம், காற்று போன்றனவற்றினால் உருவாக்கப்பட்டது என்றும் ஒவ்வொன்றாக ஒழியவே உடலானது அழிந்துபோகும் என்றும் உடலின் நிலையாமை உணர்த்தப்படுகின்றது. உடல் ஐம்பூதங்களினால் உருவாக்கப்பட்டது என்பதற்கு முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர் இயற்றிய "மண்திணிந்த நிலலும்" என்று தொடங்கும் பாடலின் வரிகள் சான்றுபகர்கின்றன.

திருமந்திரத்தில் உடல் வாழ்விற்கு நுகரக்கூடிய செல்வங்களெல்லாம் பொருட்செல்வம் எனவும் அவை அழியக்கூடியவை என்றும் அருட் செல்வமாகிய கடவுள் உயிர் மற்றும் உணர்வுகளே அறியமாட்டாது எனவும் குறிப்பிடப்படுகிறது. மேலும் புத்தர் போதித்த நிலையாமை குறித்த கருத்துகளையே நாலடியாரின் யாக்கை நிலையாமையில் இடம்பெற்ற பாடல்களும் (21-30) வலியுறுத்தி நிற்கின்றன. உலகில் நாடாளும் அரசன் முதல் ஆண்டி வரை இறப்பினைச் சந்திக்கவேண்டியவர்களே. வாழ்க்கைப் பயணம் முடிவடைய முன்னர் எம்மால் இயன்ற உதவிகளினை பிறர்க்குச் செய்தல் பொருத்தமானது என அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

### 1.4 முடிவுரை

உலகில் இருக்கக்கூடிய சமயங்களும், அச்சமயங்களின் போதனைகளும் சமய தத்துவங்களும், அதனைப் போதிப்பவர்களும் தங்கள் தங்கள் சமயம்சார் அனைத்து விழுமியங்களும் செயற்பாடுகளும் தெய்வீகமானவை என்றவாறாக வாதிடுவர், வழக்குரைப்பர். இவ்வுலகிற்கு கௌதமரின் போதனைகள்தான் என்ன? அவரின் போதனைகள் பல்வேறு விதமாக புரிந்துகொள்ளப்பட்டன என்பதனை மறுக்கமுடியாது. ஆனாலும் ஓர் உண்மை என்னவெனில் புத்தரின் போதனைகளின் பிரதிபலிப்புகள் புத்தரின் தோற்றுவாய்க்குப் பின்னர் தோன்றிய தமிழ் இலக்கியங்களிலேயே அழுத்தி நோக்கப்பட்டதைக் காணக்கூடியதாகவுள்ளது.

(தொடரும்)

# உணர்ப்புதினம்

இராகவன்

பாகம் 3

நான் போனகிழமை, சுந்தரராமசாமியின் குழந்தைகள், பெண்கள், ஆண்கள் புதினத்தைச் சென்னை வானொலி நிலையம் ஒலிபரப்பின புதினப் பக்கங்களில் கேட்டதாகச் சொல்லியிருந்தன். அந்தப் புதினத்தை மட்டுமில்லை "புயலில் ஒரு தோணி" (ப.சிங்காரம்), "ஒற்றன்!" (அசோகமித்திரன்), "வேள்வித்தீ"(எம்.வி.வெங்கட்ராம்), "மானிடம் வெல்லும்"(பிரபஞ்சன்), "சாயாவனம்" (சா.கந்தசாமி), "இதயநாதம்"(ந.சிதம்பரசுப்பிரமணியம்), "கஸ்தூரி திலகம்"(பரணீதரன்), "ஆத்மாவின் ராகங்கள்"(நா. பார்த்தசாரதி), "கடலில் மர்மம்"(தமிழ்வாணன்), "திருச்சிற்றம்பலம்"(ஜெகசிற்பியன்), "ஜஸ்டிஸ் ஜெகநாதன்"(தேவன்) எண்டு இப்பிடிக் கனக்கப் புதினங்களைக் கேட்டிருக்கிறன். 'இந்தப் புதினப் பக்கங்களை வாசிக்கிறாக்களில ராமசாமி சுதர்சன் எண்டவரைப் பற்றிப் போனகிழமை சொல்லியிருந்தன். அவரைத்தவிர ராமசாமி முரளி, சாரதா ஜம்புநாதன் எண்டு இன்னுமிரண்டு பேரிருந்தவை. இந்த மூண்டு பேருந்தான் மாறிமாறி வாசிக்கிறவை.

இந்தப் புதினப் பக்கங்களிலை நான் எதிர்பாராத நயமான காரியமொண்டும் நடந்திச்சுது. "ஒற்றன்!" நாவல் வாசிச்சு முடிஞ்சாப்போலை அதை எழுதின அசோகமித்திரனை ஒரு சின்னப்பேட்டி எடுத்தினம். அசோகமித்திரன் அமெரிக்காவிலயிருக்கிற அயோவாப் பல்கலைக்கழகத்திற்கு ஒரு கருத்தரங்கில கலந்துகொள்ளப் போனவர். அப்ப அங்க நடந்த விசயங்களை வைச்சுத்தான் "ஒற்றன்!" எண்ட அந்தப் புதினத்தை எழுதினவர். அப்ப அதிலை ஒரு கேள்வி கேட்டினம். இது ஒரு துப்பறியும் நாவல் மாதிரித் தலைப்பிருக்குது. ஆனால் துப்பறியும் நாவல் இல்லை. அப்ப ஏன் இதுக்கு ஒற்றன் எண்டு பெயர் வைச்சனீங்கள்? எண்டு. அதுக்கு அசோகமித்திரன், "ஒற்றன் என்பது தனியே உளவாளியைக் குறிப்பதல்ல. நன்றாக அவதானிப்பவரும்கூட ஒற்றன்தான். இந்தப் புதினம் முழுக்க முழுக்க அவதானிப்பை மையப்படுத்தியது. அதனால்தான் புதினத்தின் முகப்பில் ஒற்றன் என்ற சொல்லின் முடிவில் ஓர் ஆச்சரியக்குறியும் இடப்பட்டுள்ளது" எண்டு பதில் சொன்னார். இதெல்லாம் வாசிப்பின்போது கிடைக்காத நயமானதோர் அனுபவம்.

33

மற்றது நான் இதிலை குறிப்பிட்டிருக்கிற புதினங்கள் பெரும்பாலனவற்றை இன்னும் வாசிக்கவில்லை. ஆனால் வானொலியில் கேட்டதெல்லாம் இண்டைக்கும் மனதில் நிலைத்திருக்கிறது. தேவன் எழுதிய ஜஸ்டிஸ் ஜெகநாதன் எண்ட புதினம் ஒரு கொலை பற்றிய நீதிமன்ற விசாரணையை மையப்படுத்தி முழுக்க முழுக்க நீதிமன்றத்தினுள்ளேயே கதை நகரும். இதை வாசித்தவர் சாரதா ஜம்புநாதன் ராஜேஸ்குமார், ராஜேந்திரகுமார், புஷ்பா தங்கத்துரை, சுஜாதா போன்ற துப்பறியும் எழுத்தாளர்களின் நாவல்களைவிட அதிக விறுவிறுப்பாக நகரக்கூடிய விதத்தில தேவன் அதை எழுதியிருந்தார்.

இதிலே நான் குறிப்பிட மறந்த ஒரு புதினம் இப்பத்தான் நினைவுக்கு வந்தது. அது ரா.சு.நல்லபெருமாளின் "கல்லுக்குள் ஈரம்". எட இன்னுமொண்டும்கூடவே ஞாபகம் வருது. சி.சு.செல்லப்பாவின், "சுதந்திரதாகம்". இந்தக் "கல்லுக்குள் ஈரம்" என்ற புதினத்தின் கதையைத் திருடித்தான் நடிகர் கமல்ஹாசன், "ஹேராம்" படத்தை எடுத்ததாக ஒரு சர்ச்சையும் அப்போது எழுந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்யாணி

உயிரில்லாக் கூடுகளாக அலைகிறோம்
போர்ப் பேயிடம் மாட்டிக்கொண்டோம்
மரணம் பயம்காட்டிச் சென்றது
அந்தக் கொடிய நினைவுகள்,
இறப்பின்போதும் எரிந்துபோகாது.

தூக்கிச்செல்ல ஆளின்றித் துடித்த உயிர்கள்
எரிந்துமுடியாத உடலின் பாகங்கள்
காகங்களும் நாய்களும்..இழுத்துப்போட
கழுகுகள் வராத வான் தேசமாக
விமானங்கள் பறவைகளைச் சுட்டு வீழ்த்தின.

உழவு வண்டியில் பிணங்களோடு
சேர்ந்து பயணித்தோம்.
நகரும் உயிர்கள் மட்டுமே தப்பித்தன.
நடக்கமுடியாதவை அடிபட்டு...
அலங்கோலமாய்த் தெருவில் கிடந்தன!

திக்குகள் எல்லாம் அவல முகங்கள்
வேட்டையாடிய முடிவின் வெறியும் வெற்றியும்
துண்டாடித் துவம்சம் செய்து
பிண்டங்களாக்கிச் சிரித்து மகிழ்ந்த
அகிம்சை சொன்ன போதி தர்மர்கள்
வெட்டிக் குவித்து சுட்டுப் பொசுக்கி
வன்மங்களை வானிலிருந்து
பூமிவரை தெளித்தார்கள்.

மண்கிடங்குகள் மூச்சுக்காற்றை,
முழுதாக விழுங்கி நெரிசல் சலசலப்பில்...
வீங்கி முட்டி முனகின.
இனி யாரையும் உள்வாங்கிக் காப்பாற்ற
இயலாமல் களைத்தன.
அவை உயிருடன் பிணங்களை
உள்ளிழுக்கத் தொடங்கின.

பிள்ளைகளை இரும்புக்கைகளால்..
இறுகப்பற்றிக்கொண்டு ...இழுத்தபடி..
தாரா நடையில் தாண்டுகிறோம்..
தலை தெரிந்தால் குண்டு பாயலாம்...
பிள்ளைகள் ஒன்று முன்னால்..
கைகளில் ஒன்று... வயிற்றில்.... மற்றொன்று.
'அப்பா' 'அப்பா' எனக் கதறும் மூத்தவன் குரல்
நிஜத்தைத் தட்டுகிறது....
எல்லோரும்தானே ஒன்றாக வந்தோம்?

அலையென அடித்து வரும் சனக்கடலுக்குள்
உன்னை எங்கு தேடுவது?
'நிற்காதே போ போ' என்கின்றன குரல்கள்...
எங்கு தவறவிட்டேன்?
'பின்னால் வருகிறாய்' என்கிறது மனம்
'தொடர்வாய்' என்கிறது எண்ணம்...
'முன்னால் போகிறாய்' என்கிறது மூளை.

செத்ததும் சாவதுமாக சனக்கூட்டம்
பிணக் குவியல்களைத் தாண்டி...
வேகமாக நகர்கிறது.
பின்னால் விழுகின்ற பீரங்கிகள்
உயிரின் ஈரத்தை உறிஞ்சுகின்றன...
திரும்பிப்போக மனம் எண்ணுகிறது...
மூன்று உயிர்கள் என்னிடம்...
பசியோடும் களைப்போடும்..
அழுது ஓய்ந்த குழந்தைகளை
இழுத்துக்கொண்டு மீண்டும்....
வந்த பக்கம் போவேனோ?

உயிரின் பாதி நீ வருவாயெனும் நம்பிக்கை
வேகமாகத் தள்ளி எங்கோ சேர்த்தது.
எங்களை உயிரினும் மேலாக
நேசித்த உன் வரவுக்காக...
காத்திருந்தோம்...வந்துமுடிந்த வரிசை பார்த்து
கத்துகிறோம்.... எங்கே போனாய்?
மனிதத் தலைகளை விலத்தி
எங்கே போய்த் தொலைந்தாய்?

என் கைகளைப் பற்றி வந்தவர்
இறந்துகொண்டிருந்த குழந்தைக்கு
இறுதி நீர் கொடுத்தாராம்..
பார்த்தவர் பலவிதமாகச் சொன்னார்கள்....
ஆண்கள் தனிப்பக்கம் ஒரு வரிசை...
தனித்து வந்த ஆண்களுக்கு..ஒரு வரிசை
'அவர்களுக்கு' ஒரு வரிசை
எந்த வரிசைக்குள் போனாயோ?
குடும்பமுள்ள தலைவன்....
பிரிந்து தனியனாகிப் போனதென்ன ?

சொன்ன வரிசைக்குள் நுழைந்து..
விதி ஏன் இப்படி...உறவுகளை வெட்டிப் பிரித்து
வேட்டையாடி முடித்தது?
தமிழன் தலைவிதி ஏன் இப்படி மாறிற்று?
காதல் செய்து வாழ்வின் அர்த்தம் கற்பித்த
கணவர்...... எங்கே?
கத்தும் குழந்தைகளைக்
காப்பாற்றும் தலைவிதியை
காலம் என் கையில் ஏன் திணித்தது?

ஏன் பிரிந்தாய்? எல்லாமாய் இருந்தாய்...
எதற்கும் குறையில்லை....அமைதியின் வடிவம்
சிரிக்கும் முகம்...ஓய்வில்லா உழைப்பு...
பாசம் கொண்ட பரிவு முகம்...
வறுமையைச் சொல்லாத ஏழை நீ....
மகாராணியாக எனை வாழ வைத்தாய்....
சில வருடங்கள் தானா எம் வாழ்க்கை?
அத்தனை கொடியவர்களா நாங்கள்?
காலம் தன் கணக்கை கூட்டிப் பெருக்கி
கழித்துப் பிரித்து, தூக்கித்தூர எறிந்துவிட்டதே!

காவல் இருந்தோம்.....காட்ட மறுத்தார்கள்.
வருவாய் என்றார்கள்.....
வாக்குத் தந்தார்கள்....
பசியின் கொடுமை..வாழ்வின் வெறுமை ..
வருவாய் எனும் நம்பிக்கை வாழச் சொன்னது!
பதினாறு ஆண்டுகள் இரக்கமின்றிக் கடந்தன...
பக்கத்துணை இன்றி உன் நினைவு சுமந்து..
காதலின் இழப்பை நினைத்து
இத்தனை காலம் எப்படி வாழ்ந்தேன்?

தனிப்பெண் என்கிறார்...
பெண் தலைமை என்கிறார்...
வாழ்வாதாரம் கொடுக்கிறார்..
வாழ்வை வளமூட்ட முனைகிறார்..
அரசியல் சதி..பகை விழுங்கும் பழிதீர்த்தல்...
ஒன்றாகி....திரிந்து...வெறிகொண்டு
அப்பாவிகள் வாழ்வைத்தானே
செத்தொழித்துப்போயிற்று..

பட்டமரங்களாய்...பாராட்ட
ஆளில்லாப் பொழுதுகளாய்
மனதுக்குள் வெந்து..புகைந்து....
வெடித்து...புழுங்கி...அழுது...வெம்பி..
தேடி ஓய்ந்தாயிற்று....
காணாத பொழுதில் எழுதிய காதல் கடிதங்கள்
கட்டுக்கட்டாய் என் தலைமாட்டில்..
நீவரும்போது நான் இறந்துபோனாலும்
உனை நினைத்து வாழ்ந்த நினைவுகளை
நீ உணர்ந்து அழவேண்டும்!

உன் புகைப்படங்கள் எதுவுமில்லை..
எல்லாம் போர் தின்று தொலைந்தன.
நான் இல்லாக் காலத்தில் நீ
தேடிவந்து சேர்ந்துவிட்டால்..
பிள்ளைகளுக்கு அடையாளம்..
எதை ஐயா கொடுப்பேன் நான்?
உன்முகம் மறக்கும் நிலை எனக்கு வந்தால்...
என்னை முடித்துவைக்கும் வரம் ஒன்றை
காலனை நான் கேட்டு வைத்தேன்.


சுவாமிப்படமில்லை என் வீட்டின் சுவரில்
கையெடுத்துக் கும்பிடக் கடவுளில்லை
நீ தானய்யா என் கடவுள்..
சுவர்மீது உனை நான் வரைந்த கிறுக்கலொன்று
வாசல் முன்னே வடிவாக தொங்குதய்யா?
வழிபார்த்துக் காத்திருக்கும்..என்முகமோ
பொட்டு வைத்து பூமுடிச்சு...
வருவாய் என்று...என்னை வழிநடத்தும்.

காவியங்கள் சொன்ன காதல் ....
சினிமாவும் சொல்லும் காதல்..
உச்சுக் கொட்டி உலகம் வியக்கிறது..
கிராமத்து வயல் வெளியில்..
தொடங்கிய காதல் கதை
போரோடு போன கதை
யார் வந்து படம் பிடித்தார்?
யார் எழுதி வைப்பார் என் கதையை?
என்வீட்டுச் சுவரிலெல்லாம்....அழுகின்ற
என் கதையை கிறுக்கி கிறுக்கி
கண்ணீரால் நான் வரைந்தேன்!

நெஞ்சுமுட்டும் நினைவுகளை...
நீர்கசியும் விழியிரண்டை
நஞ்சும் கொல்லாது...கூடும் வேகாது...
என் மூச்சு வெறியேற..அருகிருந்து கைபிடித்து
பால் வார்க்க வருவாயோ?
என் பிணத்தை தூக்கி நீ கொண்டு
சுடலைக்குப் போவாயோ?

16
போரின் கவிதை

ஆனந்தி



# எதிர்காலம்

பாலைவன சுடு மணலில்
ஊரும் பாம்புகள் இனி
எனது வீட்டின்
செல்லப்பிராணியாகலாம்.

மடல் பிழந்து
வறண்ட மதுவை சொரியும்
பேரீச்சை மரங்கள்
நிழல் மரங்களாகலாம்.

பட்டிப் பொங்கல் விட்டொழிந்து
ஒட்டகப் பொங்கல்
தேசிய பண்டிகையாகலாம்.

உஷ்ண மணல் வெளியில்
உருண்டு விளையாடப்
பழகும் குழந்தைக்கு
ஒட்டகப்பால் பானமாகவும்
கள்ளிப்பால் ஒத்தடமாகவும்
ஆகலாம்

இதுதான் நம்
எதிர்காலம் பற்றிய குறிப்பு.

வாழிய
நமோ நமோ மாதா

கவிஞர் வேல். லவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையால் சிறந்தவர்

# பொன்னுத்துரை கமலநாதன்

ஓ க.ஸ்ரீகுமரன்



**நீத்தார் நயப்புரை**

தனது அறிவாற்றலையும் ஆளுமையையும் சமூக மேம்பாட்டுக்காகப் பயன்படுத்துபவர்கள் சிலரே. அவ்வாறு தனது வாழ்நாளில் பெரும்பகுதியை சமூகச் செயற்பாடுகளுக்காக அர்ப்பணித்த ஒருவராக அமரர் பொன்னுத்துரை கமலநாதன் விளங்குகிறார். 13.5.1947இல் தாவடி என்ற கிராமத்தில் பிறந்த கமலநாதன் தனது ஆரம்பக்கல்வியை தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார்.


கொக்குவில் தொழிநுட்பக் கல்லூரியில் சேர்ந்து தட்டச்சு சுருக்கெழுத்துத் துறையில் பயிற்சிபெற்றார். தொடர்ந்து இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் தட்டெழுத்தாளராக நியமனம்பெற்றுக் கடமையாற்றினார். சிறிது காலத்தின் பின்னர் அளுத்கம ஸாஹிராக் கல்லூரியில் ஆசிரியப் பணியை ஏற்றுக்கொண்டார். இக்காலத்தில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் வர்த்தக பாடத்தில் ஆசிரியப் பயிற்சிபெற்று பயிற்றப்பட்ட ஆசிரியரானார். அத்துடன் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் வணிகமாணி சிறப்புப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டதுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும் பெற்றுக் கொண்டார். பின்னர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆசிரிய நியமனம் பெற்று பகுதித் தலைவராகவும் உப அதிபராகவும் கடமையாற்றினார்.

இலங்கை அதிபர் சேவை போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி தரம் 1 அதிபர் நியமனம் பெற்று யூனியன் கல்லூரியிலேயே 1994இல் அதிபர் பதவியினையும் ஏற்றுக்கொண்டார். அடுத்து தான் கல்வி பயின்ற கொக்குவில் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி (1996-2007) அங்கேயே ஓய்வுபெற்றார். யூனியன் கல்லூரியிலும், கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் தனது அர்ப்பணிப்பான சேவையினால் பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி அப்பாடசாலைகளை மிளிரச்செய்த பெருமை இவருக்குரியது.

படிக்கும் காலத்தில் கொக்குவில் கிழக்கு சனசமூக நிலையத்தில் பொருளாளராக இருந்துள்ளார். விழிப்புலன் வலுவிழந்தோர் வாழ்வகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட அவர் நீண்டகாலம் பொருளாளராகவும் இருந்தார். கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், அப்பாடசாலையின் நிதியங்கள் ஆகியவற்றிலும் இவர் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம், சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலய தர்மகர்த்தா சபை, தென்சுன்னையூர் சிவபூதராயர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் உள்ளிட்ட பல பொது அமைப்புகளின் பொருளாளராகக் கடமையாற்றியுள்ளார்.

சைவபரிபாலனசபையின் தேர்வுச் செயலாளராக பல ஆண்டு காலம் பணியாற்றி இலங்கை முழுவதும் சைவநெறி மற்றும் தமிழ்மொழித் தேர்வுகள் நடைபெறவும் மதிப்பீட்டுப் பணிகள் இடம்பெறவும் அயராது பாடுபட்டார். சுன்னாகம் சிவில் பாதுகாப்புக் குழு, சுன்னாகம் அரச மருந்தக நோயாளர் நலன்புரிச் சங்கம், செனட்டர் நாகலிங்கம் சிலை உருவாக்கக்குழு என ஒன்றல்ல இரண்டல்ல பல அமைப்புகளில் அவர் பொறுப்பான பதவியினை வகித்து சமூக சேவையினை ஆற்றியுள்ளார். இவரது சேவையினைக் கௌரவித்து சுன்னாகம் தெற்கு இந்து இளைஞர் மன்றம் சமூகச்சுடர் விருதினை வழங்கிக் கௌரவித்திருந்தது.

தனது வணிகத்துறை அறிவை மாணவர்களுக்கு பயனுள்ள வகையில் வழங்கி, பலரை உயர்த்திவைத்த சிறப்பும் இவரைச் சாரும். இவரிடம் பயின்றவர்கள் இன்று உயர்பதவிகளை அலங்கரிக்கின்றனர். இவ்வாறு செயற்கரிய செய்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பொ.கமலநாதன் 25.6.2024 அன்று காலமானார். அவரது பூதவுடல் நீங்கி ஒரு வருடஞ் சென்றபோதும் அவரது சேவையும் கீர்த்தியும் என்றென்றும் அழியாது நினைவில் நிற்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org